விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 05 வெள்ளிக்கிழமை (19.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 90

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# ஐ.நா.சபை-இலங்கை உறவில் விரிசல் ஏற்படக் கூடிய அபாயம்!

## அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் விரிசல்நிலை ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையில் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குவதற்கு நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கும் பான் கீ மூனின் திட்டத்திற்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு தற்போதைக்கு மன்னிப்பு இல்லை

### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தற்போதைக்கு மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் முன்னணி ஊடகங்களில் ஒன்றான சிங்கப்பூர் ஸ்ட்ரேய்ட்ஸ் ஊடகத்திற்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆயத்தமாகாத நிலையில் ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலில் களமிறங்கியமை ஓர் முட்டாள்தனமான தீர்மானம் என அவர் சுட்டிக்காட்டி (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா விசாரணை நீதிமன்றுக்கு புதிய நீதிபதிகள் குழு நியமனம்!

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள 4 குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள 2-வது நீதிமன்றத்துக்குப் புதிய நீதிபதிகள் குழுவொன்றை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய நீதிபதிகள் குழுவின் பரிந்துரைகளை இன்று ஜனாதிபதிக்கு வழங்கவுள்ளோம். பொன்சேகா மீது சுமத்தப்பட்டுள்ள 7 குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக 2 இராணுவ நீதிமன்றங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினராக இருந்தவர்களும் பிரித்தானியாவில் தஞ்சம் கோரலாம்

### நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் அகதி தஞ்சம் கோருவதற்கு விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தது ஒரு தடையாகாது எனப் பிரித்தானிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப்புலிகள் அமைப்பில் 1992 ஆம் ஆண்டு (16 ஆம் பக்கம் பார்க்க)









## கல்விமாணி வகுப்புக்கள்

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறுகின்ற கல்விமாணி வகுப்புக்கள் எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி நடைபெறும் என இணைப்பாளர் அறியத் தருகின்றார். (ச-11)

## மெய்வல்லுநர் சங்க ஒன்றுகூடல்

நெஸ்ரமேல்ட் ஆதரவில் கடந்த 6ஆம் திகதி இடம் பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் அலுவலர்களாக கடமை புரிந்த மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்க உறுப்பினர்களையும் மற்றும் ஏனையவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தவறாது ஒன்றுகூடுமாறு மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கம் அறிவித்துள்ளது. (ச-3)

# மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவு தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (நீகோட்) ஊடாக மீளக் குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் படி வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவுதொகை, இதுவரை பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு பதினான்காவது நாளாக நாளை 20ஆம் திகதி அதற்கான அனுமதிக் கடிதம் கையளிக்கப்படவுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளும் அக் கிராம சேவகர் பிரிவுகளில் வசிப்போர் அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய இடங்களும் வருமாறு,

வேலணை பிரதேச செயலர் பிரிவு

ஜே/07, ஜே/08, ஜே/09, ஜே/10, ஜே/11, ஜே/12, ஜே/13, ஜே/14, ஜே/15, ஜே/16, ஜே/17, ஜே/18, ஜே/19, ஜே/20, ஜே/21, ஜே/22, ஜே/23, ஜே/24, ஜே/25, ஜே/26, ஜே/27, ஜே/28, ஜே/29, ஜே/30, ஜே/31, ஜே/32, ஜே/33, ஜே/34, ஜே/35, ஜே/36 காலை 9 மணி வேலணை பிரதேச செயலாளர் அலுவலகம்.

மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் பிரிவு ஜே/418, ஜே/419 காலை 9 மணி மணற்காடு குடத்தனை பழைய உதவி அரசாங்க அதிபர் பணிமனை.

ஜே/420, ஜே/421 மதியம் ஒரு மணி பொற்பதி குடத்தனை புதிய உதவி அரசாங்க அதிபர் பணிமனை. (ச-14)

## கல்விமாணி விரிவுரைக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணி பட்டநெறி விரிவுரையாளர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வு நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வினை தேசிய கல்வி நிறுவக ஆசிரிய வலுவூட்டத் திணைக்கள பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க மற்றும் செயற்திட்ட அதிகாரிகள் நடத்தவுள்ளதாக தேசியக் கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ச-14)

# டிரக்டர்-ஹன்டர் மோதி விபத்து இடையில் சிக்குண்ட குடும்பஸ்தர் பலி

(வடமராட்சி)

ஹன்டர் வாகனத்துக்கு மணல் ஏற்றிக் கொண்டிருந்தவரை பின்னால் வந்த உழவு இயந்திரம் மோதியதில் அவர் அவ் இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் வடமராட்சி குடத்தனைப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் குடத்தனை கிழக்கைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான க.வரதன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பில்மேலும்தெரியவருவதாவது,

குடத்தனையில் ஹன்டர் வாகனத்துக்கு மணல் ஏற்றிக் கொண்டிருந்த போது பின்பக்கமாக கட்டுப்பாட்டையிழந்து வேக மாகவந்த உழவு இயந்திரம்ஹன்டருடன்மோதியுள்ளது.

இதன்போது இடையில் சிக்குண்ட அவர்சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-3,24)

## கல்விமாணி ஆங்கிலக்கற்கை ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி ஆங்கிலபாடநெறி யாழ். தேசியகல்வியியற்கல்லூரியில்ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்கற்கை நெறியின் ஆரம்பவைபவ நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் வலுவூட்டல் திணைக்கள பணிப்பாளர் கலாநிதி நிகால் விக்கிரமசிங்க, பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், செயற்றிட்ட அதிகாரிகள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ச-14)

# பொன்சேகாவுடன் கைதுசெய்யப்பட்ட 26 ஆதரவாளர்கள் விடுதலையாகினர்

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகாவுடன் கைது செய்யப்பட்ட அவரின் உதவியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் 26 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜெனரல் பொன்சேகாவுடன் கைது செய்யப்பட்ட அவரின் உதவியாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் 26 பேர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை குற்றப் புலனாய்வுத்துறையினர்முன் வைக்க முடியாததே அதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

பொன்சேகாவுடன் கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகள் செய்யப்பட்டபோதும் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன் வைக்க முடியவில்லை என அரச தரப்பு சட்டவாளர் றியாஸ் ஹம்சா தெரிவித்துள்ளார். (ச-5)




## ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

### தாவடி தெற்கு- கொக்குவில்

### வருடாந்த குளிர்த்தி கிராம அருட்பவனி

19.03.2010 வெள்ளிக்கிழமை பங்குனித்திங்கள் 5ஆம் நாள் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம், 4.30 மணிக்கு காளி அம்பாள் அழகிய காராம்பசு வாகனத்தில் எழுந்தருளி கிராம அருட்பவனி ஆரம்பமாகும்.

20.03.2010 சனிக்கிழமை பங்குனித் திங்கள் 6ஆம் நாள் காலை 10.30 மணிக்கு ஸ்நபன அபிஷே கம், விஷேட பூஜை, பகல் 12.00 மணிக்கு மஹேஸ்வர பூஜை இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

இங்ஙனம்
ஆதீனகர்த்தா
பிரம்மஸ்ரீ நா.சசிதரசர்மா (ரவி ஐயர்)

(900)


## வலைப்பந்தாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ள வலைப்பந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு நாவாந்துறையிலுள்ள சென்.நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே போட்டியாளர்களை மைதானத்திற்கு வருகை தருமாறு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர். மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ஓ-30)

## மகோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திர காளி அம்மன் ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 28ஆம் திகதி சப்பறமும் 29ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ச-27)

## கிளி. ஆசிரியர்களுக்கான மார்ச் மாதச் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக இணைப்பில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி கல்வி வலய ஆசிரியர்களிற்கான பங்குனி மாத சம்பளம் நாளை மற்றும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக்கல்விப் பணிமனை யில் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சிவலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-14)

## ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேர்தல் தொகுதிகளில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தை மேற்கொள்ள ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்யவுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் அவரது பாரியார் மைத்திரி ரணில் விக்கிரமசிங்க மற்றும்ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவும் வருகை தரவுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் மாபெரும் தேர்தல் பிரசாரம்இன்றுமாலை 2.00மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-7)


# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

## மீண்டும் யாழில்

20.03.2010 முதல் 25.03.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு )(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து 'செல்வ மாளிகை'
(பழைய வலம்புரி காரியாலயம்)
இல.15 ,வெள்ளாந்தெரு ,யாழ்ப்பாணம் .
T.P.: 0719315664 , 0777569205

(சி-4686)



# பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் தமிழரசுக்கட்சி பிரமுகர்கள் கலந்து கொள்ளும்,

## பொதுக்கூட்டம்

காலம்:- இன்று (19.03.2010) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி முதல்

இடம்:- பாரதியார் சனசமூக நிலையம் தாமரை வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, (ஆறுகால்மடம்) யாழ்ப்பாணம்.

தலைமை:- வைத்தியக் கலாநிதி சி.யமுனானந்தா

உரையாற்றுவோர்:- திரு.இரா.சம்பந்தன், திரு. மாவை.சேனாதிராஜா, திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன், திரு.அ.விநாயகமூர்த்தி, பேராசிரியர் இரா.சிவசந்திரன், திரு. சீ.வி.கே.சிவஞானம், திரு. ஏ.என். இராசேந்திரன், திரு.எஸ்.குலநாயகம், திரு.ஈ.சரவணபவன், திரு.சி.சிறீதரன், திரு.பொ.ஐங்கரநேசன், திரு.க.அருந்தவபாலன், திரு.மு.றெமீடியஸ் மற்றும் வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா, திரு.சுமந்திரன்.

அனைவரும் அணி திரளுங்கள்! வெற்றியை நமதாக்குங்கள்!!

ஒழுங்கமைப்பு:- பேராசிரியர் இரா.சிவசந்திரன்






(சி-4599)

நாமும் வாக்களிப்போம் நம்மவரையும் வாக்களிக்க வைப்போம்



# இதய அஞ்சலி

## திருமதி சேவியர் பிலோமினா அம்மா



17.03.2010 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது திருச்சபையைச் சேர்ந்த திருமதி சேவியர் பிலோமினா அம்மா அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர் யாவருக்கும் எமது திருச்சபைக் குடும்பத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர்.

(904)

# இன்று ஒரு தகவல்

## தேள்கடி வைத்தியம்

அஞ்சலை என்கிற அந்த கிராமத்துப் பெண் தலைவிரி கோல மாக ஓடிவருகிறாள்.

"ஐயா! என் வீட்டுக்காரரை தேள் கொட்டிவிட்டது. ஏதாவது மருந்து கொடுங்களேன்" என்றாள்.

அந்தப் பெண்ணுக்குத் தான் எத்தனை பரிவு தன் கணவன் மீது! ஏதோ தேள் தன்னையே கொட்டிவிட்ட மாதிரி துடிக்கி றாள். தவிக்கிறாள். கிராமங்களில் அவசர வைத்தியசாலைக்கு எங்கே போவது?

ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்றால் வண்டி கட்டிக் கொண்டு தான் நகரத்துக்குப் போக வேண்டும். அங்கே தான் டாக்டர்கள் இருக்கிறார்கள்.

கிராமங்களில் டாக்டர்கள் இல்லையே என்கிற குறையைப் போக்கும் விதத்தில் சில 'கிராமத்து டாக்டர்கள்' உருவாவ துண்டு அல்லது உருவாக்கப்படுவதுண்டு.

அப்படி உருவாக்கப்பட்டவர்களில் எங்க மாமா சொக்கலிங் கமும் ஒருவர். எங்க ஊருக்குப் பக்கத்து ஊரில் அவர் இருந்தார். அவருக்கு விவசாய வேலைகள் தெரியும். குளம், குட்டைகளில் மீன்பிடிக்கத் தெரியும். அவ்வளவு தான்! வைத்தி யருக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

இருந்தாலும் கிராமத்து மக்கள் அவரைக் கண்கண்ட மருத்துவ தெய்வமாகவும் – கைராசியுள்ள டாக்டராகவும் பரிபூரணமாக நம்பினார்கள்.

அவரும் அவர்களின் நம்பிக்கையைப் பொய்யாக்க விரும்பவில்லை.

வயிற்றுவலி, மூட்டுவலி என்று வருபவர்களுக்கு ஏதாவது மருந்து கொடுத்துச் சாப்பிடச் சொல்வார்.

அவர்களும் பயபக்தியோடு வாங்கிச் சாப்பிடுவார்கள். "இப்ப பரவாயில்லை! வலி குறைந்து விட்டது" என்று சொல்லி விட்டுப் போவார்கள்.

முக்கியமாகத் தேள் கடிக்கு அவர் செய்கிற வைத்தியம் ரொம்பப் பிரசித்தம். நானும் அவர் செய்கிற வைத்தியத்தைப் பல சமயங்களில் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன்.

அப்போது எனக்குப் பத்துவயதிருக்கும். அடிக்கடி மாமா வீட்டுக்குப் போவேன். அவர் திண்ணையில் உட்கார்ந்திருப்பார். அஞ்சலை மாதிரி யாராவது ஓடி வருவார்கள்.

"ஐயா தேள் கொட்டிவிட்டது" என்று துடிப்பார்கள்.

இவர் கொஞ்சம் கூட பதட்டப்படாமல்... பக்கத்திலிருப் பவர்களைப் பார்த்து ஒரு வெற்றிலை கொண்டுவாருங்கள்" என்பார். கொண்டு வருவார்கள்.

அந்த வெற்றிலையைக் கையில் எடுத்துக் கொண்டு இவர் மட்டும் எழுந்து வீட்டுக்குள்ளே போவார்.

கொஞ்ச நேரத்தில் ஏதோ ஒரு மருந்தை அந்த வெற்றிலை யில் வைத்துச் சுருட்டிக் கொண்டு வெளியே வருவார்.

வலியால் அவஸ்தைப்படுகிறவனின் வாயைத் திறக்கச் சொல்லுவார். அவன் திறப்பான். மருந்துடன் சுருட்டப்பட்ட வெற்றிலையை அவனது வாயில் திணித்து "நன்றாக மென்று முழுங்கிவிடு" என்பார்.

அவனும் அப்படியே செய்து விடுவான்.

கொஞ்சநேரம் கழித்து "இப்பொழுது எப்படி இருக்கு?" என்பார்.

"வலிபோன இடம் தெரியவில்லை" என்பார்கள்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் அவர் கொடுக் கிற மருந்து என்னவென்பதை யாரிடமும் சொல்லமாட்டார்.

பரமரகசியமாக வைத்திருப்பார்.

"சொன்னால் பலிக்காது" என்பார்.

ஒருநாள் அந்த மருந்து என்னவென்பதை கண்டுபிடிக்க வேண்டுமென்று திட்டம் போட்டேன். ஒருநாள் ஒளிந்திருந்து அதைக் கண்டு பிடித்து விடட்டேன்.

அது என்ன என்பது தெரிந்த போது எனக்குள் ஓர் அதிர்ச்சி. "இது எப்படி தேள் கடியைக் குணப்படுத்துகிறது" என்பது எனக்கு அப்போது புரியவில்லை. இப்போது புரிகிறது.

வலியைக் குறைத்தது மருந்து அல்ல! மனம்!

மருந்து என்று மனப்பூர்வமாக நம்பி, அதைச் சாப்பிட்டால் அந்த நம்பிக்கையே மருந்தாகிறது. இந்த உண்மையை இன்றைய மருத்துவ நிபுணர்களே ஒத்துக் கொள்கின்றனர்.

கிராமத்து மக்கள் எதையும் அப்படியே நம்பும் சுபாவமுடைய வர்கள். அவர்களின் நம்பிக்கை தான் அவர்களைக் குணப் படுத்தியிருக்கிறது. ஒருநாள் என்னையே தோற்கடித்துவிட்டது.

மாமா, "வெற்றிலை கொண்டுவா மருந்து தருகிறேன்" என்றார்.

"வேண்டாம் மாமா அது என்ன மருந்தென்பது எனக்குத் தெரிந்து விட்டது" என்றேன்.

அவர் ஆச்சரியமாக பார்த்தார்.

"அன்றைக்கு வீட்டுக்குப் பின்னால் போய் கோழிகள் போட்டிருக்கிற எச்சத்தை எடுத்து வெற்றிலையில் மடித்துக் கொண்டிருந்தீர்களே..." இதைக் கேட்டது, முதற் தடவையாக தன்னையே தேள் கொட்டி விட்டது போல் மாமா துள்ள ஆரம்பித்தார்.

நான் வெற்றிலையைத் தேட ஆரம்பித்தேன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நல்லூர் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட மட்ட விளை யாட்டுப் போட்டிகளின் முதலாம் நாள் நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளின் பெயர் விபரம் வருமாறு,

**நீளம்பாய்தல் - (11வயது ஆண்கள்)**

ஜெ. ஜதுர்சன் (நல்லூர் காசிப் பிள்ளை வித்தி), பெ. கபிலேசன் (ஆனைப்பந்தி மெ.மி.வித்தி), க. கலாதரன் (நல்லூர் சென் பெனடிக் றோ.க.த.க).

**நீளம்பாய்தல் - (13 வயது ஆண்கள்)**

ஆர். சஜீந்திரா (யா. இந்துக் கல்லூரி), கஜமுகன், கே. விதுர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி),

**உயரம் பாய்தல் - (13வயது ஆண்கள்)**

ஏ. ஐன்ஸ்ரன் (யா. இந்துக் கல்லூரி), டிஷாந்தான் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே. விஜய் (யா. இந்து கல்லூரி).

**குண்டெறிதல் - (15 வயது ஆண்கள்)**

சி. கௌசிகன் (யா. இந்துக் கல் லூரி), ரி. சங்கீர்த்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ச. கஜமுகா (யா. கனகரெத்தினம் ம.ம.மி).

**ஈட்டி எறிதல் - (15 வயது ஆண்கள்)**

ஏ. ஹரிசங்கர் (யா. இந்து கல் லூரி), பி. புருஷோத்மன் (கொக்கு வில் இந்துக் கல்லூரி), ச. கஜமுகா (கனகரெத்தினம் ம.ம.வி)

**குண்டெறிதல் - (17 வயது ஆண்கள்)**

கே. சுலோஜன் (கொக். இந்துக் கல்லூரி), கே. நிலக்ஷன் (யா. இந் துக் கல்லூரி), சி. விசாகன் (கனக ரெத்தினம் ம.ம.வி).

**தட்டெறிதல் - (17 வயது ஆண்கள்)**

எஸ். மிருணன் (கொ. இந்துக் கல்லூரி), ர.பிரதாப் (கனகரெத்தி னம் ம.ம.வி), க. பிரவீனன் (கோண் டாவில் இராம ம.வி).

**ஈட்டி எறிதல் - (19 வயது ஆண்கள்)**

சி. கபிலன், ஆர். சுஜீவன் (யா. கோண்டாவில் இ.ம.வி), ரி. தனீசன் (யாழ். இந்துக் கல்லூரி).

**நீளம்பாய்தல் - (11வயது பெண்கள்)**

சி. சிவானி (கோ. இ.ம.வி), நா. சிவானுஜா (கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தி), பா. மதுஷாயினி (கொ. ஆரம்ப பாடசாலை).

**உயரம் பாய்தல் - (11வயது பெண்கள்)**

நி. சுமிநாகினி, ஸ்ரீ. சோபனா (கொ. இந்து ஆரம்ப பாடசாலை), பா. மதுஷாஜினி (யா. இந்து ஆரம்ப பாடசாலை).

**நீளம்பாய்தல் - (13 வயது பெண்கள்)**

வி. சுலோஜினி (யா. இ.ம.க.), கோ. நிஷாந்தினி (யா. நா.ம.வி), க. றொஷாலாஜினி (கொ. இ.க).

**உயரம் பாய்தல் - (13 வயது பெண்கள்)**

பி. கஜபாலினி, எஸ். லோஜிகா (யா.இ.ம.க.), கே. விதுஷா (யா. நாமகள் மகா வித்தி).

**ஈட்டி எறிதல் - (15 வயது பெண்கள்)**

க. கௌதமி (யா.க.ம.ம.வி), வி. அமிர்தாம்பிகை (யா. இ.ம.க), இ. ஜனரஞ்சனி (கொ.இ.க.).

**குண்டெறிதல் - (15வயது பெண்கள்)**

ச. தர்சிகா (நல். இ.த.பெ. பா), இ. தனரஞ்சனி (கொ.இ.க.), கி. துர்கா ஜினி (யா. இ.ம.க.).

**தட்டெறிதல் - (17வயது பெண்கள்)**

க. சுரேக்கா (கொ.இ.க.), எ. பிறிஸ்ரா (அரியாலை பார்வதி வித்தி), சி. பிரதாஜினி (யா. இ.ம.க).

**ஈட்டி எறிதல் - (19வயது பெண்கள்)**

சு. ரிஷிகா (யா.இ.ம.க.), மெ. சர்மினி (யா. செங்குந்தா இ.க), வி. காயத்திரி (யா.முத்துத்தம்பி மகா வித்தி.

**தட்டெறிதல் - (19 வயது பெண்கள்)**


ஸ்ரீ நிவேகா (கொ.இ.கல்), மோ. பிருந்தா, சு. ரிசிகா (இ.ம.க.).

**உயரம் பாய்தல் - (11வயது ஆண்கள்)**

சி. பவித்திரன் (இ.ஆ.பா), த. டிலோஜன் (தி.இ.த.க.பா), ஜெ. ஜதுஷன் (நல்லூர் காசிப்பிள்ளை).

**100 மீற்றர் - (17வயது ஆண்கள்)**

எஸ். சஜீவன் (யாழ். இந்துக்கல் லூரி), எல். ஆதித்தன் , வி. லோஜன் (கொக்குவில் இ. கல்லூரி). (தொடரும்)



தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன் புரிச்சங்கத்தின் பத்தொன்பதாவது ஆண்டு பொதுக்கூட்டத் தில் சங்கத்தினால் வெளியிடப்பட்ட அனுபவ தீபம் எனும் மாதாந்த இதழை சங்கத்தின் முன்னாள் தலைவர் தண்டாயுத பாணி ஓய்வு பெற்ற ஆசிரியர் சபாரட்ணத்திற்கு வழங்குவதை யும் அருகில் சங்கத்தின் தலைவர் செ. சுப்பிரமணியம், செய லாளர் டாக்டர் சி. கந்தையா ஆகியோர் அருகில் நிற்பதனை யும் படத்தில் காணலாம். (படம் : சாவ. நிருபர்)

# இராசி பலன்

*19-03-2010*
*(பங்குனி 5 , வெள்ளிக்கிழமை)*
*சதுர்த்தி பின்னிரவு 5.21 மணிவரை*
*அச்சுவினி முற்பகல் 11.02 மணிவரை*
*இராகுகாலம் 10.48 - 12.18 மணிவரை*
*சுபநேரம் 6.18-7.48 மணிவரை*
*சுன்னாகம் ஐயனார் கொடி, சுதுமலை சிவன் கோயில் கொடி, பண்ணாகம் முருகமூர்த்தி கொடி, சக்தி கணபதி சதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | தெய்வசிந்தை, பெரியோர் சந் திப்பு, சயனசுகக்குறைவு, போசன சுகம். |
| இடபம் | சுபகாரியச் செலவு, தொழில் முன்னேற்றம், பிரயாணம், திடீர் நன்மை. |
| மிதுனம் | தெய்வ தரிசனம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை. |
| கடகம் | அதிக பிரயாசை, நண்பர்கள் உதவி, ஆரோக்கியமான நிலை, சுபநிகழ்வு. |
| சிங்கம் | மனஸ்தாபம், கட்டுப்படுத்தல், பயணம், தெய்வ சிந்தை. |
| கன்னி | வேலைச்சுமை, ஆரோக்கியக் குறைவு, நண்பர்கள் மனஸ்தா பம், முயற்சி தாமதம். |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனவருவாய், போசன சுகம், நல்ல செய்தி. |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், போசன நன்மை, தெய்வ தரிசனம். |
| தனுசு | தொழில் மந்தநிலை, காரிய தாமதம், குடும்பக்கவலை, வீண் செலவு. |
| மகரம் | மாதாசுகம், தெய்வசிந்தை, நல்ல முயற்சி, சுபசெலவு. |
| கும்பம் | சகோதரர் வழி நன்மை, பிரயாண நன்மை, வாக்குமேன்மை, நல்ல செய்தி. |
| மீனம் | விவாதம், தெய்வ சிந்தை, முயற்சி தாமதம், அதிக செலவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 100 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 80 | 40 |
| கோவா | 50 | 60 | 40 |
| கரட் | 100 | 110 | 90 |
| பூசணி | 30 | 35 | 40 |
| புடோல் | 60 | 70 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 25 | 30 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 110 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 110 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 80 | 90 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 3.0 | 35 | 30 |

# மரண அறிவித்தல்

# தம்பிமுத்து விநாசித்தம்பி



சாவகச்சேரி வடக்கு கிராம்புவில்லை சேர்ந்த தம்பிமுத்து விநாசித்தம்பி நேற்று (18.03.2010) வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான தம்பிமுத்து பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான ஐயம்பிள்ளை மாணிக்கம் தம்பதியினரது மருமகனும் காலம் சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சிவகாமி, கார்த்திகேசு, சின்னப்பிள்ளை ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr. வனஜாராணி (UK), சிவநேசன் (சுவிஸ்) சிறிதரன் (விரிவுரையாளர், வணிகதுறை, யாழ்.பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் Dr. கதிர்காமவாசன் (UK), கோமகள் (சுவிஸ்), சுதா (சமுர்த்தி முகாமையாளர், கொடிகாமம் சமுர்த்தி வங்கிசங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேவனி (UK) சாகரா, விசேகா, விசாகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை (20.03.2010) பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் கட்டை வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.


தகவல்:-
சிறிதரன் (மகன்)
தொ.பே.இல. 021 321 4611

(906)

# நான்காயிரத்து ஆறாம் ஆண்டில் வெள்ளத்தினால் உலகம் அழியும்

இத்தாலிய தத்துவமேதையும் ஓவியருமான லியனர்டோ டாவின்ஸி உலகமானது 4006 ஆம் ஆண்டில் முடிவுக்கு வரும் என எதிர்வு கூறியுள்ளதாக வத்திக்கான் ஆராய்ச்சியாளர் ஒருவர் உரிமை கோரியுள்ளார்.

4006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21



ஆம் திகதி பிரபஞ்ச ரீதியில் ஏற்படும் பாரிய வெள்ளப்பெருக்கில் உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் அழிவடையும் என லியனர்டோ டாவின்ஸி எதிர்வு கூறியுள்ளதாக சப்றினா சபோர்ஸா கலிட்ஸியா என்ற மேற்படி ஆராய்ச்சியாளர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் 4006 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதியானது புதிய மனிதத் தோற்றத்திற்கான ஆரம்பம் என்பதில் லியானர்டோ டாவின்ஸி நம்பிக்கை கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

லியனர்டோ டாவின்ஸியால் வரையப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இறுதி இராப்போசனத்தை சித்திரிக்கும் ஓவியத்தின் மேலிருந்த அவரது கையெழுத்துக்களை ஆராய்ந்தே மேற்படி தகவலை சப்றினா சபோர்ஸாகலிட்ஸியா வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராக பணியாற்றுகையில் லியனர்டோடாவின்ஸியின் கையெழுத்துக்களை ஆராய்ச்சி செய்த சப்றினா தற்போது வத்திக்கானின் வரலாறு ஆவணப் பிரிவில கடமையாற்றுகிறார்.

லியனர்டோ டாவின்ஸியின் சங்கேத குறியீடுகளை விவரிக்கும் நூலொன்றை எழுதி வெளியிடுவதில் பங்கேற்ற சப்றினா ஒரு நாளிலுள்ள 24 மணி நேரத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் லியனர்டோடாவின்ஸி 24 லத்தீன் எழுத்துகளைப் பயன்படுத்தியுள்ளதாக கூறினார்.

ஓவியராகவும் விஞ்ஞானியுமாக திகழ்ந்த லியனர்டோ டாவின்ஸி கருத்துக்களை வெளியிட சுதந்திரமில்லாத காலகட்டத்தில் வாழ்ந்தால் சங்கேத குறியீடுகளில் தனது செய்திகளை மறைமுகமாக குறிப்பிட்டு வந்ததாக சப்றினா தெரிவித்தார்.

இயேசு கிறிஸ்துவின் இறுதி இராப்போசன ஓவியத்தை 1495 ஆம் ஆண்டில் வரைய ஆரம்பித்த லியனர்டோ டாவின்ஸி 1498 ஆம் ஆண்டு அதனை பூர்த்தி செய்துள்ளார். மிகவும் மோசமாக சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட இந்த ஓவியம் 1978 ஆம் ஆண்டுக்கும் 1999 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மீள புதுப்பிக்கப்பட்டது. (ஓ-6)

# நைஜீரிய பதில் ஜனாதிபதி அந்நாட்டு அமைச்சரவையைக் கலைக்க உத்தரவு

நைஜீரியாவின் பதில் ஜனாதிபதி குட்லக் ஜொனதன் அந்நாட்டு அமைச்சரவையை கலைப்பதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நைஜீரியாவின் ஜனாதிபதி உமாரு யார் அடுவா கடுமையாக நோய்வாய்ப்பட்டதனால் கடந்த பெப்ரவரி மாதம் முதல் குட்லக் ஜொனதன் பதில் ஜனாதிபதியாக கடமையாற்றுகின்றார்.

அமைச்சரவை கலைக்கப்பட்ட போதிலும் நிர்வாக நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படாதென சிரேஸ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் கடமைகளை அரசாங்க அதிகாரிகள் மேற்கொள்வார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை திடீரென கலைக்கப் பட்டமைக்காக காரணம் எதனையும் பதில் ஜனாதிபதி ஜொனதன் அறிவிக்கவில்லை என அந்நாட்டுதகவல் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அமைச்சர் நியமனங்கள் மற்றும் அமைச்சரவை கலைப்பு குறித்த காரணங்கள் தொடர்பில் விரைவில் பதில் ஜனாதிபதி அறிக்கை வெளியிடுவார் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜொனதன் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டது முதல் நாட்டில் இனக் கலவரம் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. (ஓ-6)




# தொடர் விக்கல் நோயால் தவிக்கும் பாகிஸ்தான் பெண்கள்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள ஐதராபாத் பகுதியில் உள்ள 2 கிராமங்களில் மர்மமான முறையில் விக்கல் நோய் பரவி வருகிறது. இது பெண்களை மட்டும் தாக்கியுள்ளது. இத்தகைய தொடர் விக்கல் நோயினால் சுமார் 20 பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 4 பேர் ஐதராபாத் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மர்ம நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் உறவினர்கள். இவர்களின் விக்கல் நோயை டாக்டர்களால் குணப் படுத்த முடியவில்லை இது ஏற்பட காரணம் என்ன? என்றும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நோய் அப்பகுதி மக்களிடம் பெரும் பரபரப்பையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (2-6)

# மனிதனின் நடுத்தர வயது 35 முதுமை 58இல் தொடங்குகிறது


## புதிய ஆய்வில் தகவல்

(லண்டன்)

மனிதனின் நடுத்தர வயது மற்றும் முதுமை எப்போது தொடங்குகிறது என்பதில் சர்ச்சை நிலவி வருகிறது. இது குறித்து ஆராய இங்கிலாந்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கெந்த் பல்கலைக்கழக பேராசிரியர் டொமினிக் அப்ராம்ஸ் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் ஆய்வு நடத்தினர். எப்போது இளமை முடிகிறது முதுமை எப்போது வந்து சேருகிறது என்பது குறித்து கருத்து கேட்கப்பட்டது.

இதில் 35 வயது முடிவில் இளமை பருவம் முடிந்து 36 வயது முதல் நடுத்தர வயது பிறக்கிறது. அதே நேரத்தில் 58 வயதில் முதுமை தொடங்குகிறது என்று புதிய ஆய்வில் கண்டறியப்பட்டது.



இது பெண்களைவிட ஆண்களுக்கு 2 வயதுக்கு முன்பே தொடங்கி விடுகிறது மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே வித்தியாசப்படுகிறது. சைப்ரஸ் போன்ற நாடுகளை ஒப்பிடுகையில் நோர்வே உள்ளிட்ட சில நாடுகளில் இளமை 34 வயதிலேயே முடிகிறது 57 வயதில் முதுமை தொடங்குவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது. (ஓ-6)

# பின்லேடன் பிடிபட்டால் அமெரிக்காவில் விசாரணை இல்லை

## அந்நாட்டு சட்டமா அதிபர் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் உயிருடன் பிடிபட்டால் அவரை அமெரிக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விசாரிக்கமாட்டோம் என்று அமெரிக்காவின் சட்டமா அதிபர் எரிக் ஹோல்டர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பின்லேடன் முதலில் உயிருடன் பிடி படமாட்டார். அவர் பிடிப்பட்டால்தானே அவரிடம் விசாரணை நடத்துவது குறித்து யோசிக்க வேண்டும் என்றார். இது குறித்து அமெரிக்க நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை குடியரசு கட்சி உறுப்பினர் ஜான் குல்பர்சன் பேசுகையில்,

பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் உயிருடன் பிடிபட்டால் அவரை அமெரிக்க நீதிமன்றத்தில் விசாரிக்கலாம் என்று அரசுக்கு எரிக் ஹோல்டர் பரிந்துரைத்துள்ளதாக தெரிகிறது. இந்த யோசனை அபாயகரமானது என்றார்.

ஜான் குல்பர்சன் இவ்வாறு கூறியதற்கு எரிக்ஹோல்டர் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்தார். பில்லேடனிடம் விசாரிப்பது குறித்து அரசுக்கு எவ்வித பரிந்துரையும் அளிக்கப்படவில்லை முதலில் அவர் உயிருடன் பிடிபடுவதற்கான வாய்ப்பே இல்லை என்றார். (2-6)

# பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் இந்து எம்.பிக்கள் வெளிநடப்பு

## தொடர்குண்டு வெடிப்பு தொடர்பில் சர்ச்சை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் லாகூரில் தொடர்குண்டு வெடிப்புகள் நடந்தன. இதில் உயிர் இழப்புகளும் ஏற்பட்டன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் தலீபான்களை பாகிஸ்தானில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று கோரி லாகூர் மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கை தலைமை நீதிபதி விசாரித்தார்.

அப்போது லாகூர் தாக்குதலுக்கு அமெரிக்கா பாதுகாப்பு நிறுவனம் பிளாக்வாட்டர் மற்றும் இந்துக்கள் தான் இந்த தாக்குதலுக்கு காரணம் என்று ஒரு வக்கீல் வாதாடினார். இந்த குற்றச்சாட்டை ஒதுக்கித்தள்ளிய நீதிபதி ஷெரீப் இந்துக்கள் தாக்குதலில் நேர டியாக ஈடுபட்டு இருக்கமாட்டார்கள். அவர்கள் தாக்குதலை நடத்தியவர்களுக்கு நிதி உதவி செய்து இருப்பார்கள் என்று கூறினார்.

தலைமை நீதிபதியின் இந்த குற்றச்சாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து பாகிஸ்தான் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் இந்துக்கள் பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி எம்.பியான ரமேஷ்லால் பாராளுமன்றத்தில் இந்த பிரச்சினையை எழுப்பினார்.

அப்போது அவர் கூறியவதாவது,

பாகிஸ்தானில் 40 இலட்சம் இந்துக்கள் இருக்கிறார்கள். அவர்களின் மன உணர்வை தலைமை நீதிபதி புண்படுத்தி விட்டார். ஒரு நாடு இந்த தாக்குதலுக்கு தூண்டுதலாக இருந்து இருக்கும் என்று சந்தேகப்பட்டால் அந்த நாடே வெளிப்படையாக அறிவிக்கட்டும். அதை விட்டு விட்டு இந்துக்கள் மீது பழி போடக்கூடாது. மற்ற பாகிஸ்தானியர்களை போல நாங்கள் நாட்டு பற்று மிக்கவர்கள் என்றார். (2-6)



பாலஸ்தீனத்தில் தொடரும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து லெபனானில் உள்ள அகதிகள் முகாம் முன் ஆர்ப்பாட்டம் செய்த பாலஸ்தீன குழந்தைகள்.

# பங்குனி மாதப் பலன்கள்

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம்1ஆம் பாதம்)

*வரவேற்பால் விருந்தினர்களைத் திணற டிக்கும் தனுசுராசி நேயர்களே!*

புங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, பகல் இரவாக பாடுபட்ட தற்கேற்ற பலன் கிடைக்கும் மாதமிது. கோதண்டராகுவின் ஆதிக்கத்திலும் நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் நின்று ஆட்சி செய்யும் விதத்திலும் மாதம் தொடங்குவதால் இம் மாதம் இனிய மாதமாகவே அமையும்.

மாதத் தொடக்கத்தில் பன்னிரெண்டுக்கு அதிபதியான செவ்வாய் எட்டில் மறைந்து விபரீத ராஜயோகத்தை உருவாக்குகிறார். ஒன்பது , பத்துக்கு அதிபதியான சூரியனும் புதனும் இணைந்து தர்மகர்மாதிபதி யோகத்தை வழங்குகிறார்கள். எனவே தொழில் வளர்ச்சி மேலோங்கும், தொலைதூரத்தில் இருந்து வரும் தகவல் தொகை வரவை பெருக்கும்,இது வரை எதிர்பார்த்தபடி வருமானம் 'வரவில்லையே என்ற கவலை அகலும், திறமை வெளிப்படும் நேரமிது.

தித்திக்கும் செய்திகள் தினந்தோறும் வந்து ஆச்சரியப்படுத்தும், ஒரு காலத்தில் உங்களோடு இருந்தவர்கள் நீண்ட நாளைக்கு பிறகு மீண்டும் வந்து சேரலாம். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும், கூட்டாளிகள் உங்கள் ஆலோசனைகளைக் கேட்பர், கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் இந்த நேரத்தில் புதிய நண்பர்களின் ஒத்துழைப்போடு தீட்டிய திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பத்தில் சனி சஞ்சரிப்பதால் அதன் வக்ர இயக்கம் மாறும் வரை தொழிலில் விழிப்புணர்ச்சி தேவை . இலாபத்தை முழுமையாக அடைய இயலாத சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். விஷ்ணு, இலட்சுமி வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

மார்ச் 28ஆம் திகதி மேட ராசியில் புதனும் , சுக்கிரனும் இணைகிறார்கள். புதன் உங்கள் இராசிக்கு 7 ,10க்கு அதிபதியாவார். சுக்ரன் உங்கள் இராசிக்கு 6 ,11 க்கு அதிபதியாவார் . இந்த இரண்டு கிரகங்களும் புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்தி வந்து சேரும். வாழ்க்கைத் துணை வழியே வந்த மனக்கசப்பு மாறும். உறவினர்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவர், எதிர்ப்புகள் அகன்றோடும்.

கடன் சுமையைக் குறைப்பதற்காக மேற்கொண்ட புதிய முயற்சிகள் வெற்றி தரும், மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக்கொள்ளலாம். இளைய சகோதரால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும், அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி உண்டு, அந்நிய தேசத்திலிருந்து வரும் தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் உண்டாகும், பொறுப்புகள் அதிகரிக்கும், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கூடும், அரசு வழியில் எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைத்து தொழில் வளத்தை பெருக்கிக் கொள்வீர்கள், இராசிநாதன் குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வியாழன் தோறும் தென்முகக்கடவுளை வழிபடுவதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு வழி பிறக்கும்.

இம்மாதம் பௌர்ணமி அன்று மலை வலம் வந்தால் மகத்துவம் காணலாம். இராகு வழிபாடு யோகம் சேர்க்கும்.

## மகரம்

(உத்தராடம் 2, 3 ,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1 ,2 ஆம் பாதங்கள்)

*நல்லவர்களின் தொடர்பு நீடிக்க வேண்டும் என்று எண்ணும் மகரராசி நேயர்களே!*

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தனஸ்தானத்தில் சந்திரனும் வியாழனும் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை சீராக இருக்கும். அதே நேரத்தில் இராசிநாதன் சனி வக்கரம் பெறுவதால் ஒரு சில காரியங்கள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்திலும் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். வக்ரச் சனியின் இயக்கம் மாறும் வரை பொறுமையோடு செயல்படுவது நல்லது.

குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே,ஆதாயங்களை அடைய முடியும். கொள்கைகளை ஒரு சில சமயங்களில் விட்டுக்கொடுக்கும் சூழ்நிலை உருவாகும். குடும்பச்சுமை கூடும். விரய ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால் விரயங்களும் பயணங்களும் அதிகரிக்கும் அடிப்படை வசதிகளை பெருக்கிக்கொள்ள செலவிடுவதில் தவறில்லை.

சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் திடீர் விரயங்களால் திக்குமுக்காடலாம். அஸ்டமாதிபதி சூரியனோடு ஐந்துக்கு அதிபதி சுக்ரன் இணைவதால் பிள்ளைகள் வழியில் பெரும் செலவு ஒன்று ஏற்படலாம். ஆறு, ஒன்பதுக்கு அதிபதியான, புதன், எட்டுக்கு அதிபதியான சூரியன், ஐந்து, பத்துக்கு அதிபதியான சுக்ரன் ஆகிய மூன்று கிரகங்களும் சகாய ஸ்தானத்தில் இணைந்து சஞ்சரிப்பது யோகம் தான் என்றாலும் அதை பார்க்கும் கிரகம் சனியாக இருப்பதால் சகாயங்கள் ஏற்படுவது தாமதமாகலாம்.

எனவே சனிஸ்வர வழிபாட்டை சனிக்கிழமை தோறும் முறையாக மேற்கொள்வது நல்லது. 'பெண் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும் மாதத்தின் மையப்பகுதியில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

மார்ச் 28 ஆம் திகதி மேடராசியில் புதனும் சுக்ரனும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ஆறு , ஒன்பதுக்கு அதிபதியான புதன் நான்காமிடத்தில் சஞ்சரிப்பதால் தந்தை வழியில் மனக்கசப்பு ஏற்படலாம். உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வெளி வட்டாரத்தில் கிடைக்கும் மதிப்பு வீட்டில் கிடைக்கவில்லையே என்ற கவலை மேலோங்கும்.

அதே நேரத்தில் சுக்ரனும் இணைவதால் கூட்டுக்கிரக யோகமும் செயல்பட போகிறது. புத- சுக்ர யோகம் இருப்பதால் சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். வீடு, இடம் வாங்கும் அமைப்பு ஒரு சிலருக்கு ஏற்படும். அவ்வாறு அமையும் பட்சத்தில் பூமிகாரகன் செவ்வாய் குடும்ப உறுப்பினர்களில் யாருடைய ஜாதகத்தில் நன்றாக இருக்கிறதோ அவர்கள் பெயருக்கு ஏற்ற அமைப்பில் வாங்குவது நல்லது.

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நேரம் இது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலம் கிடைக்கும். இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிடைக்கும். தன பொருட்சேர்க்கை உண்டு. உடன் பிறப்புகளிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. கேது பலத்தால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

இம் மாதம் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு செயல்பாடுகளில் வெற்றி காணுங்கள். (தொடரும்)

சிவஸ்ரீ சிங்காரம்

# இடம் பெயர் பல்கலை மாணவர்க்கு உரிய சலுகைகள் வழங்கப்பட வேண்டும்

## உந்துல் பிரேமரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர் பல்லைக்கழக மாணவர்களுக்கு உரிய சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த எட்டு மாத காலமாக இடம்பெயர் முகாம்களில் வாழ்ந்து வந்த 343 யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருக்கின்றனர்.

குறித்த பல்க்லைக்கழக மாணவர்களுக்கு குறைந்தளவு வசதிகளே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சில மாணவர்கள் கடுமையான மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் உடல் ஊனங்களை எதிர்நோக்கியுமுள்ளனர்.

எனினும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசாங்கம் எவ்வித சலுகைகளையும் வழங்கவில்லை என விசனம் வெளியிட்டுள்ளார்.

சில மாணவ மாணவியர் தமது உடமைகளை இழந்துள்ளதுடன் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளும் கிடைக்கப் பெறுவதில்லை என குறிப்பிட்டுள்ள உந்துல் பிரேமரட்ண இதற்கமைய பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உரிய நிதி உதவிகளை வழங்க அரசாங்கம் ஆவண செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

ராசய்யா துவாரகா என்ற பேராதனைப் பல்கலைக்கழக மாணவி புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் யுத்த காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்த பலருக்கு இவ்வாறு பலவந்தமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இளைஞர் , யுவதிகள் மற்றும் சிறுவர்களை பலவந்தமாக ஆயுத போராட்டத்தில் இணைத்துக் கொண்டவர்கள் சுதந்திரமாக திரிவதாகவும் பயிற்சிகளை பெற்றுக்கொண்டவர்கள் தண்டிக்கப்படுவதாகவும் கூறியுள்ளதுடன் அதிக எண்ணிக்கையிலான இடம் பெயர் மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாக அர சாங்கம் அறிவித்த போதிலும் உண்மை நிலைமை மாறுபட்டதாக அமைந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# சிறந்த தலைவர் எனக் குறிப்பிடக் கூடிய எவரும் தற்போது இலங்கையில் இல்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



இலங்கையில் தற்போது சிறந்த தலைவர் எனக் குறிப்பிடக் கூடிய எவருமில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் சகோதரரும் சிரேஸ்ட அரசியல்வாதியுமான அனுர பண்டாரநாயக்கவின் இரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்திற்குள் கூடுதல் அதிகாரத்தை பெற்றுக் கொள்ள எத்தனிப்பதே தற்போதைய அரசாங்கங்களின் பிரதான குறைபாடாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு தொடர்பான தெளிவு அரசியல் தலைவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் ஏற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிர்வாகத்துறையில் உறவினர்கள் மற்றும் நண்பர்களை நியமிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். திறமைசாலிகளை உருவாக்கக் கூடிய நிறுவனமொன்றை விரைவில் நிறுவவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## பரீட்சை பெறுபேறுகள்

(கோப்பாய்)

இலங்கை அதிபர் சேவை தரம் I ,2-I, 2- II மற்றும் 3 உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை 2008 இற்கான பரீட்சைப் பெறுபேறுகள் கல்விச் சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி செயலாளரினால் சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கடந்த வருடம் சித்திரை மாதம் கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-79)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது.

இதில் போசகராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல்,தலைவராக அ.அருந்தவநேசன் ,செயலாளராக ச.வேலழகன், பொருளாளராக ம.ஞானசம்பந்தன், உப தலைவராக அருட்சகோதரி மரியறொசாறியோ ,உப செயலாளராக மு.விக்னேஸ்வரன் , கணக்குப் பரிசோதகராக எஸ்.எஸ்.புஸ்பராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-79)

## நூல்வெளியீட்டு விழா

சமூகவியல் சமூகத்தின் ஆதரவில் க.சட்டநாதன் எழுதிய முக்கூடல் சிறுகதைகள் நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையை ந.மயூரரூபன் நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையை சமூகவியல்துறை தலைவர் கே.ரி. கணேசலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

மேலும் சிறப்புரையை ஐ.வரதராஜனும் வெளியீட்டுரையை பொ.ஐங்கரநேசனும் நிகழ்த்தவுள்ளனர். (2-6)

# சர்வதேச தங்க விருது கௌரவம் பெறும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

சிவத்தமிழ்ச்செல்வி. துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாவுக்கு தங்க விருது கௌரவம் கிடைத்திருக்கின்றது.

உலகம் பூராகவும் ஒப்புயர்வற்ற தனி நபர்களை ஆய்வுசெய்யும் உலகின் முதன்மை நிறுவனமான மதிப்புமிக்க அமெரிக்க சுய வரலாற்று ஆய்வு நிறுவனம் தனது சர்வதேச அதியுயர் கௌரவமான "இலங்கைக்கான தங்க விருது" பெற்றுக்கொள்வதற்கு தங்கம்மா அப்பாக்குட்டியை அவர் அமரராகி விட்ட நிலையிலும் தெரிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தெரிவை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதியாக மார்ச் 28 ஐ அமெரிக்க சுய வரலாற்று ஆய்வு நிறுவனம் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறது. இந்நிறுவனம் 2010 பெப்ரவரி 5ஆம் திகதியிட்டு இலங்கை தெல்லிப்பழை, துர்க்காபுரம், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி என விலாசமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விபரம் வருமாறு,

அன்பின் கலாநிதி அப்பாக்குட்டி அவர்களே! ஓர் உண்மையான வீரன் தன் உணர்வுகளால் மட்டுமே தன் அர்ப்பணிப்புக்களை வெளிக்காட்டுவதில்லை. மாறாக அவனோ அல்லது அவளோ தான் சார் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த நோக்கத்துடனான நேர்மையான செயற்பாடுகளே அவரது அர்ப்பணிப்புகளை வெளிக்காட்டுவதாக அமையும். சமூக, பொருளாதார, விஞ்ஞான ரீதியான கல்விசார் மற்றும் அரசியல் கோட்பாடுகளை நோக்கிய செயற்பாடுகளில் எவள் ஒருவனோ அன்றி எவன் ஒருத்தியோ தன் சமூகத்தினை சிறந்ததாக உருவாக்குவதற்கான செயற்பாட்டிற்கு உழைப்பவரே உண்மையான வீரன் என்று கருதப்படுவதுடன் தங்கவிருது பெற அருகதையுள்ள ஒரு வேட்பாளர் ஆவார்.

அவ்வாறான தனிநபர் தன் சொந்த நாட்டில் மட்டுமல்ல, அகில உலக ரீதியாகவும் மாட்சிமைக்குரியவராகிறார். அந்த வகையில் உலகம் பூராகவும் ஓய்வுபெற்ற தனி நபர்களை ஆய்வுசெய்யும் உலகின் முதன்மை நிறுவனமாகவும் உயர்வாக மதிக்கப்படும் நிறுவனமாகவும் உள்ள "அமெரிக்க சுய வரலாற்று ஆய்வு நிறுவனம்" தனது சர்வதேச அதியுயர் கௌரவமான "இலங்கைக்கான தங்கவிருது" பெற்றுக் கொள்வதற்கு தங்களை தேர்வு செய்துள்ளது.

இலங்கைக்கான தங்க விருதினை 'தாங்கள் ஏற்றுக்கொள்வது தங்களின் மிகத் தெளிவானதும் உறுதியானதுமான ஆக்க பூர்வமான செயலாற்றுகைக்கு உரம் ஊட்டுவ தாக அமைவதுடன் தாங்கள் சார் நிறுவ னத்திற்கும் நாட்டிற்கும் முன் முயற்சியையும் தெளிவான சிந்தனையையும் பிரதிபலிக்கும் வெளிப்பாடு ஆக அமையும். கௌரவத்திற் கான அடையாளத்தினை பிரதி பலிக்கும் ஒரு சின்னமாக விளங்கும் தங்க விருதி னைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு இழையங்களினால் ஆக்கப்பட்ட எட்டு முதல் பத்து அங்குலம் வரையிலான கேடயம் பரிசாக அளிக்கப்படும்.



அதில் பொருத்தப்பட்டுள்ள தங்க விருது கௌரவத்தின் பிரதி விம்பம் தங்க ளின் பெயர் தங்கத் துகழ்கள் ஜொலிப்பு மிளிர பொருத்தப்பட்டுபளிச் சென மினுங்கிக் கொண்டு இருக்கும். மூடப் பட்டுள்ள அப்பிரதி விம்பத் தின் உட்புறத்தில் விருது தொடர்பான விளக்கங்கள் விரிவாக வழங்கப் பட்டிருக்கும்.

கேடயத்தினை கண்ணுறும் ஒவ்வொருவரும் தங்களின் முழுமையான அறிவு, தெளிவு, ஆற்றல் மற்றும் நாட்டிற்கான அர்ப்பணிப்பை அறிவித்துக்கொள்வார்கள். இலங்கைக்கான தங்கவிருதின் தனித்தன்மையையும் வழங்கப்படுவதற்கான தேர்வையும் என்னால் வர்ணிக்கவோ, வலியுறுத்தவோ முடியாது. இன்று இவ்விருதினை ஏற்றுக் கொள்ளு மாறு தங்களை ஊக்கப்படுத்துகிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஓ)

## தெரிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப்பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 10 மணி முதல் 11 மணிவரை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் தவறாது இப் பரீட்சைக்குத் தோற்றுமாறு பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் 119332 -119581 சுட்டெண்ணுடைய பரீட்சார்த்திகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்திய நிலையத்திலும் 119582-119879 சுட்டெண்ணையுடைய பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## கிழக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் திங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்ட கிழக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. இதனை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பிரேம்குமார் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் காரணமாக கடந்த 10 ஆம் திகதி உபவேந்தர் பத்மநாதன் பதவிவிலகிய நிலையில் கிழக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## வவுனியாவில் 20 ஆம்திகதி ரணில் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 20 ஆம் திகதி வவுனியாவுக்கு செல்லவுள்ளார்.

அன்று மாலை 3 மணிக்கு வவுனியாவில் வன்னி மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவிருப்பதாக வவுனியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க தனது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை இன்று நடத்தவுள்ளார். (2-6)

## புலிகளின் அடையாளச் சின்னங்களை அகற்றும் நடவடிக்கையில் அரசாங்கம்

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்து அடையாளச் சின்னங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக உயர்மட்ட அரசாங்க தகவல்கள் டெய்லிமிரர் இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளன.

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் அடையாளச் சின்னங்கள் உல்லாசப் பயணிகளின் மத்தியில் பிரசித்தி பெற்றவையாக காணப்படுகிறது.

அந்தவகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுக்குச் சொந்தமான வீடுகள் மற்றும் கட்டிடங்களை பார்வையிடுவதற்காக மக்கள் செல்வதாகவும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விடுதலைப் புலிகளின் அடையாளச் சின்னங்களை உல்லாசப் பயணிகள் பார்வையிடுவதற்கு ஊக்குவிக் கமாட்டாது எனவும் அரசாங்கம் குறிப்பிட்டது.

எனவே இவற்றினை இல்லாதொழித்து குறித்த பகுதிகளில் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது எனவும் குறிப்பிடப்படுகிறது. இதனை சுற்றுலாத் துறை அமைச்சின் செயலாளர் ஜோர்ஜ் மிச்சேல் உறுதிப்படுத்தி யுள்ளார். (2-6)

## 15ஆயிரம் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிலிருந்து 15 ஆயிரம் கறவைப் பசுக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக கால்நடை அபிவிருத்தியமைச்சின் செயலாளர் சுனிமல் சேனாரத்ன தெரிவித்தார்.

இதன்முதற்கட்டாக 4ஆயிரம் கறவைப் பசுக்கள் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு இலங்கைக்குக் கொண்டு வரப்படுமெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நமது நாட்டைச் சேர்ந்த ஒரு கறவைப் பசுவானது நாளொன்றுக்கு 3 தொடக்கம் 5லீற்றர் வரை பால் தரும் அதேசமயம் அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பசுவானது நாளொன்றுக்கு 40 தொடக்கம் 50 லீற்றர் வரை பால் தரக்கூடியது.

இத்தகைய பசுக்களை நம் நாட்டுக்கு எடுத்துவருவதன் மூலம் தேவையான பால் உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் வெளிநாட்டிலிருந்து பால்மா இறக்குமதியை நாளடைவில் குறைப்பதே எமது இலக்காகும் என்றும் அதற்கு ஏற்ற வகையில் 2015 ஆம் ஆண்டுக்குள் 15 ஆயிரம் கறவைப் பசுக்கள் இலங்கைக்கு எடுத்து வரப்படவுள்ளதென்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் 2005ஆம் ஆண்டு முதல் 86 சதவீத பால் உற்பத்தி உள்நாட்டில் நடைபெறுவதுடன் 14 சதவீதமே இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (2-4)


**இலங்கை மின்சார சபை -யாழ்.பிரதேச அலுவலகம்**

**மின்தடை பற்றிய அறிவித்தல்**

"திருத்த வேலைகள் காரணமாக 20.03.2010 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை யாழ்.குடாநாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்."

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வேலைகள் முடிவுற்றால் உடன் மின்சாரம் வழங்கப்படும்.

இதனால் மின்பாவனையாளர்களிற்கு ஏற்படும் அசௌகரியங்களிற்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.

*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்"*
*இலங்கை மின்சாரசபை.*

(C-4685)


## ஏப்ரல் முதலாம் திகதி வவுனியாவில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

வவுனியாவில் எதிர்வரும் ஏப்ரல்மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து இந்தக்கூட்டம் நடைபெறவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வன்னிமாவட்ட வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று மக்களின் ஆதரவினைத் திரட்டி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# சுய கௌரவத்துடன் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே களமிறங்கியுள்ளோம்

## சுயேட்சைக்குழு-10 முதன்மை வேட்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை



சுயேட்சைக் குழுக்கள் எல்லாமே பணத்திற்காகவே களத்தில் குதித்துள்ளன என்ற பிரசாரம் எம்மைப் போன்ற நேர்மையானவர்களையும் தாக்குவது பொறுப்பற்ற செயலாகும்.

எமது மக்கள் புத்திசாலிகள், எந்த சுயேட்சைக்குழுக்கள், எந்த கட்சிகள் விலை போயுள்ளார்கள் என்பதை இலகுவாக கண்டுபிடித்து விடுவார்கள். இத்தனை உயிர் உடமைகளையும் இழந்த எமது மக்களின் உணர்வுகளையும் அபிலாசைகளையும் விற்று துரோகமான அரசியல் நடத்துபவர்கள் நாங்கள் அல்ல என்பதை பொறுப்பாகவும் ஆணித்தரமாகவும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த பாராளுமன்ற தேர்தலிலே தமிழ் மக்கள் 22 உறுப்பினர்களை தெரிவு செய்து பலமான சக்தி அணியை உருவாக்கி விட்டதாக நினைத்தார்கள். நாமும் கூட இதற்கு பாடுபட்டோம்.


ஆனால் எமது மக்கள் மிகவும் இக் கட்டான சூழ்நிலைகளிலும் ஏன் உயிருக்கு ஊசலாடிய போதும் கூட இவர்களில் பலர் மௌனமாகவும் பொறுப்பற்ற விதமாகவும் எவருக்கு ஏதோ நடக்கின்றது என்ற போக்கில் வெளிநாடுகளில் உலா வந்தார்கள். பாராளுமன்ற உறுப்புரிமைப் பதவிக்காகவும் பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்காகவும் தான் இவர்கள் பெற்றுக்கொண்டார்களோ என்று அரவணைத்த மக்கள் ஆதங்கப்பட்டார்கள்.

இன்று கட்சிகளில் இருந்து மக்கள் விரும்பியவர்கள் கூட சில வெளிநாட்டு சக்திகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை இலகுவாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். இச் செயற்பாடும்பலகட்சிகளை உருவாக்கியுள்ளது.

வன்னியில் இருந்த எமது உடன் பிறப்புக்கள் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளார்கள். எமது மக்களின் முதுகெலும்பான கல்வியையும் பொருளாதாரத்தையும் மீண்டும் உயர்வடையச் செய்ய வேண்டிய அவசர, அவசிய தேவை எம்முன் உள்ளது. நாம் நலிவடைந்து செல்வோமானால் இலகுவாக அழிக்கப்படலாம்.

எனது 44 வருடகால கல்விச் சேவை யில் கல்வி அபிவிருத்திக்காக கஷ்டப்பட்ட பிர்தேசங்களிலும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் கூட துணிச்சலாக மக்களோடு மக்களாக நின்று செயற்பட்ட விதத்தையும் குறிப்பாக வன்னியில் இருந்த எமது உடன் பிறப்புக்கள் முட்கம்பி வேலிக்குள் இருத்தப்பட்ட போது புத்திஜீவிகளை ஒன்று சேர்த்து பத்திரிகைக்ளில் வேண்டுகோள் விடுத்து உடன் பிறப்புக்களின் நிலை கண்டு மக்கள் தந்த அத்தியாவசிய பொருட்களை ஆட்சியில் இருந் தவர்களை அணுகி கொழும்பில் இருந்து லொறி களில் ஏற்றி சாதுரியமாக உடன் பிறப்புக்க ளுக்கு கையளித்ததையும் பதவியைப் பயன் படுத்தி எல்லாவற்றையும் இழந்து மெனிக் பாமில் இருந்த மாணவர்களுக்கு சத்துணவு, பாதணிகள், கற்றல் உபகரணங்கள், கொழும் பில் உள்ள பிரபல பாடசாலை ஆசிரியர்களு டன் சென்று க.பொ.த (சா/த, உ/த) வகுப்புக் களை நடத்தி க.பொ.த (உ/த) வில் 60 % மாண வர்களை சித்தி பெற உதவியதையும் கண்ட மூடித்தன மாகவும் சேறு பூசுவதும் வேதனைக்குரிய விடயம். மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி வீர வசனம் பேசி பாராளு மன்ற கதிரை பெற்று மக்களுக்கு பயனற்றவர்களாக இருக்க துடிப்பவர்களை இம் முறை மக்கள் அடையாளம் கண்டு கொண்டுள்ளார் கள்.

எமக்கு மக்கள் தந்துவரும் பெரு வாரியான ஆதரவைக் கண்டு பயந்து கீழ் தரமான அரசியல் வங்குரோத்து பிரசாரம் நடத்துபவர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். தந்தை செல்வா போன்று அர




### பொதுத் தேர்தல்-2010

நலன்விரும்பிகள், புத்திஜீவிகள், பொது மக்கள் என்னை அரசியலில் ஈடுபட்டு எம்மக் களின் இடைக்கால அவசர, அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றித்தருமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றே அரசியலில் ஈடுபட் டுள்ளேன்.

இதற்கமைய எம் மக்களுக்காக உரிய சுய கௌரவத்துடன் எக்கட்சியுடனும் சரணாகதி யடையாமல் மக்களின் தேவைகளை நிறை வேற்றிக்கொள்ள சுயேட்சையாக களமிறங் கியுள்ளோம்.

நேர்மையாகவும் பக்கம்சாராமலும் செயற் பட்டுவந்த பத்திரிகைகளில் ஒன்று இன்று தமக்கு வேண்டியவர்களை பாராளுமன்ற கதி ரைக்கு கொண்டுவருவதற்காக எல்லோர் மீதும் பொறுப்பற்ற விதமாகவும் கண்

சியலில் நேர்மையான கொள்கைகளில் உண்மையாகவே செயற்படுங்கள். மக்கள் ஆதரவு கிடைக்கும். சேறு பூசி குறுக்கு வழிகள் மூலம் பாராளுமன்ற கதிரை செல்ல முயற்சிக்காதீர்கள். அது இனியும் சாத்தியப் படாது.

அத்துடன் நீங்கள் நேர்மையாக செயற் பட்டு மக்களின் உணர்வுகளுக்கும் அபிலா சைகளுக்கும் கௌரவம் அளித்து மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட்டால் எம் மக்களின் நன்மைக்காக தேவையான நேரத்தில் ஒற் றுமையாக செயற்பட தயாராகவுள்ளோம்.

எமது மக்கள் இம்முறையாயினும் மக் களுக்கு உண்மையாகவே உதவக்கூடியவர் களை இனம்கண்டு விழிப்புடன் வாக்களிக் குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



நல்லூர் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் கோட்டகல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா தலைமையில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர்கள்,ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும் யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பணிப்பாளர் எஸ்.தயாளன் விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களின் விளையாட்டுக் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :என்.குமார்)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ். பிரதேச சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற் பகல் 9.30 மணிக்கு யா/புனித சார்ள்ஸ் மகா வித்தியாலயத்தில் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலக கணக்காளர் வே. வேல்நிதி கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் புதிய அங்கத்தவர்கள் சேர்வும் அட்டைகள் பெறாதவர்களுக்கு அட்டை வழங்கலும் இடம்பெறவுள்ளது. (ஓ-6)

## முறைசாராக் கல்விப்பிரிவினால் தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாலராஜி சமூக வலுவூட்டல் நிறுவனத்தில் யாழ். வலயக்கல்வி அலுவலக முறைசார கல்விப்பிரிவினால் தொழில் பயிற்சிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள் ளது.

இதில் பெண்களுக்கான உடையமைத்தல் ,அழகுக்கலைப் பயிற்சிகள் கேக் ஐஸ் சிங் தயாரித்தல்,அலங்காரப் பொருட்கள் உற்பத்தி ,வீட்டுமின்இணைப்பு,மோட்டார் றீவைண்டிங்,தையல் இயந்திரம் திருத்துதல், கணனிப்பயிற்சிகள், சாரதிப்பயிற்சிகள் , புத்தகம் கட்டுதல் ஆகிய பயிற்சி நெறிகள் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சிக்காலத்தில் பயி லுநர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு கள் வழங்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. பயிற்சியில் இணைய விரும்புவோர் இல 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர். (ஓ)

## கணிதம் -மதிப்பீட்டுப்பணி


(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை பரீட்சைக்குடும்ப பாடசாலைகளில் முதன்மை பாடசாலை யில் கணிதம் மதிப்பீட்டுப்பணி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வலயப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முதன்மைப் பாடசாலை அதிபர் , அப்பாடசாலையின் பொறுப்பான கணித ஆசிரியர் ஒருவருடன் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இம் மதிப்பீட்டுப்பணிகள் நேற்று நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ)





வடமராட்சி கிழக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தொழில்திறன் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் திருமதி சு. பிரபாகரன் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் மா.சிறீஸ்கந்தகுமார், சிறப்பு விருந்தினரான மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜன் கண்காட்சியைப் பார்வையிடுவதனையும், சிறப்பு விருந்தினரான வடமராட்சி முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வே. இராசகுமாரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்க்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளது.

இதில் 27ஆம் திகதி சனிக்கிழமை முத்துச்சப்பறமும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-6)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

இணுவையம்பதி சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

மேலும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விசேட இன்னிசைக் கச்சேரியும்இடம் பெறவுள்ளது. (ஓ-6)

✠✠✠

(பொன்னாலை)

வட்டு சங்கரத்தை - பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு பகல் உற்சவமும் மாலை 5 மணிக்கு இரவு உற்சவமும் நடைபெறும். (6-49)




## தெய்வீகத் தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு பண்ணாகம் அண்ணா கலைமன்றம் நடத்தும் " திருவிளையாடற் புராணம்" எனும் தலைப்பிலான தெய்வீகத் தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மாலை 6 மணியிலிருந்து 7 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் அருள்மொழியரசு பிரம்மஸ்ரீ . சிவ.வை. நித்தியானந்தசர்மா கலந்து சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (ஓ-6)

# கேரதீவு -சங்குப்பிட்டி பாதையை திறக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்கக் கோரி பூநகரிப் பகுதியில் சேவையாற்றும் ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி செல்வதனால் பரந்தன் சந்தி வரை சென்று நீண்ட தூரம் பயணித்தே அங்கு செல்ல வேண்டியுள்ளதால் நேரமும் விரயமாகின்றது என்பதை தெரிவித்து அப் பகுதியில் சேவையாற்றும் ஆசிரியர்கள் கேரதீவு -சங்குப்பிட்டிப் பாதையை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

மேலும் இப்பாதையை திறந்தால் தமக்கு நேரம், தூரம்,செலவு எல்லாம் குறைவடைவதால் சிறந்த சேவையை ஆற்ற வசதியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். (ஓ)

# வாக்காளர் அட்டை விநியோகம் திங்கட்கிழமை ஆரம்பம்

ஏப்ரல் 08 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் வாக்காளர் அட்டைகளை திட்டமிட்டபடி விநியோகிப்பதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை மீள்குடியேற்றம் சரியாக நிறைவேறாத காரணத்தினால் விநியோகம் சற்று காலதாம தமடையலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு மொத்தமாக 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. அத்துடன் எதிர்வரும் 25, 26 ஆகிய திகதிகளில் தபால் மூல வாக்களிப்பும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-30)

# வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டு அபிவிருத்தி திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ளூர் சேவைகளை மேம்படுத்தும் நாலாண்டுக்கு அபிவிருத்தித் திட்டப்பணிகளை (நெல்சிப்) முன்னெடுக்கும் நடவடிக்கையில் தாம் ஈடுபட்டு வருவதாக நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச பிரிவிலுள்ள 22 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஒவ்வொரு பகுதிகளிலும் காணப்படும் வீதிகள், பாலங்கள், மதகுகள், கால்வாய்கள், சந்தை வசதிகள், மின்சார வசதிகள், சமூகக் கட்டமைப்பு வசதிகள், சுகாதார வசதிகள், ஆரோக்கியம், சூழல் பாதுகாப்பு, ஏனையவை போன்ற வசதி வாய்ப்புக்களை விருத்தி செய்வதற்கு பொதுமக்களின் கருத்துக்களை பெற்று அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக நல்லூர் பிரதேச சபையில் இத்திட்டத்திற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கு சென்று அங்கு கூட்டங்களைக் கூட்டி மக்களின் அபிப்பிராயங்களை கேட்டு வருகின்றனர்.

இத்திட்டத்திற்கென உலக வங்கி 200 மில்லியன் வழங்கவுள்ளதாகவும் இக் கொடுப்பனவுத் திட்டங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பதை பொறுத்து பகுதி பகுதிகளாக வழங்கப்படும் என நல்லூர் பிரதேச சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (2-30)

## கணனிப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலயத்தின் நிதியுதவியுடன் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கு இலவச கணனி பயிற்சி நெறி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அலுவலர் தெரிவித்தார். (ஓ-30)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் சட்டக் கல்வி கற்கைநெறி 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் நடத்தப்பெற்ற 2009 ஆம் ஆண்டு சைவசித்தாந்த பிரவேச, பால பண்டிதர் தேர்வுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சபையின் தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ஓ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

மாதனை மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.ரகுநாதன் கலந்துகொண்டு வெற்றியீட்டும் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ-19)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. சித்திரவடிவேல், சிறப்பு வருந்தினர்களாக புத்தூர் வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் த.நடராசா, புத்தூர் கிழக்கு கிராம சேவை அலுவலர் க.வைத்தியநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6)

## ஆராதனைக் கூட்டங்கள்

(பொன்னாலை)

கொழும்பு- இயேசு தேற்றுகிறார் ஊழியஸ்தர்களின் " இருளிலிருந்து ஒளிக்கு" எனும் விடுதலை ஆராதனைக் கூட்டங்கள் நாளை சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

கல்விளான் -சுழிபுரம், காண்வீச்சி மைதானத்தில் 20-21 ஆம் திகதிகளும் அராலி மத்தி,குமுக்கன் குளம் மைதானத்தில் 22-23 ஆம்திகதிகளும் அச்சுவேலி,அசம்பிளி ஒவ்கோட் சபையில் (இராசவீதி, யூனியன் காம் புக்கு முன்னால்) 25-26 ஆம் திகதிகளிலும் அளவெட்டி தெற்கு, கலைநகர் மைதானத்தில் 28-29 ஆம் திகதிகளிலும் தினமும் மாலை 5 மணிக்கு இவ் ஆராதனைக் கூட்டங்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-49)

## நெடுந்தீவு சுற்றுலா நீதிமன்ற திறப்புவிழா

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் நெடுந்தீவு சுற்றுலா நீதி மன்றக் கட்டடம் பிரதம நீதியரசர் அசோகடி சில்வாவினால் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதிபதிகளான ஏ.ஆர்.என். காமினி அமரதுங்க, டி.ஜே.டி.எஸ் பால பட்டபெண்டி, கே. ஸ்ரீபவன் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளதாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஓ-6)

# விருப்பு வாக்குகளுக்காக மோதலில் ஈடுபடும் ஐ.ம.சு.மு வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

விருப்பு வாக்குகளுக்காக மோதினால் உயர் பதவிகள் கிடைக்காமல் போகும் என ஐ.ம.சு.மு வேட்பாளர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளதாக சுதந்திரக் கட்சி செயலாளரும் அமைச்சருமான மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்குக்காக மோதலில் ஈடுபடும் ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மோதல்களில் தொடர்புபட்டுள்ளவர்களுக்கு தேர்தலின் பின்னர் அமைச்சுப் பதவிகளோ அல்லது வேறு உயர் பதவிகளோ வழங்கப்படமாட்டாது என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சில மாவட்டங்களில் ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர்கள் விருப்பு வாக்குக்காக மோதிக் கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் இதன்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தி கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

# கடன் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் மீள பேச்சுவார்த்தை

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடன் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் தாம் மீளவும் பேச்சுவார்த்தை நடாத்த உத்தேசித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டம் கட்டமாக இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் தொடர்பில் மீளப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது கட்சி ஆட்சியமைத்தால் இந்த விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனவும் தமது கொள்கைகள் தொடர்பில் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மொத்த வருமானம் 705 பில்லியன் ரூபா எனவும் மொத்த வட்டி மற்றும் கடன் கொடுப்பனவுகள் 825 பில்லியன் ரூபா எனவும் நட்பு நாடுகளிடம் கடன் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளத் தாம் உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களுக்கு புறம்பான வகையில் தற்போதைய அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ள வர்த்தகக் கடன்களை தமது அரசாங்கம் மீளச் செலுத்தாது எனத் தெரிவித்த இது தொடர்பில் சர்வதேச வங்கிகளுக்கு தாம் ஏற்கனவே அறிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# பாராளுமன்றம் பதவியேற்றவுடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

## அமைச்சர் ஜனக பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் புதிய பாராளுமன்றத்தில் பதவியேற்ற பின் முதற்கட்டமாக நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் ஆரம்பிக்கப்படுமென உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தெரிவித்தார்.

ஒரு நாடு அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமானால் அந்நாட்டில் சாந்தியும், சமாதானமும் அமைதியும் நிலைநாட்டப்பட வேண்டியது அவசியமானதாகும். அமைதியற்ற நாட்டில் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் அபிவிருத்தியை எட்டமுடியாது.

அத்துடன் அத்தகையதொரு நாட்டில் இவ்வளவு கனிப்பொருட்கள் மூலவளங்கள் உள்ளிட்ட பௌதீக வளங்கள் உள்ள போதும் அவற்றின் மூலம் எந்தவொரு பயனையும் பெறமுடியாது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெற்றுவந்த யுத்தம் நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவு வீழ்ச்சியடையச் செய்துள்ளது. யுத்தம் முடிவடைந்த பின் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மீளக்கட்டியெழுப்பப்பட்டு வருகிறது.

நாட்டில் முழுமையான அமைதியும் சமாதானமும் நிலைநாட்டப்பட்டு விட்டதாக கருத முடியாது. புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை என்று அரசியல் தீர்வு காணப்படுகின்றதோ அன்றுதான் இந்த நாட்டில் சமாதானமும் நிலைநாட்ட முடியும் என்று தெரிவித்தார்.

எனவே இதனைக் கருத்திற் கொண்டு புதிய பாராளுமன்றம் பதவியேற்றதையடுத்து முதற்கட்டமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே நாட்டுப் பற்றுள்ள அனைவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும். எனவே பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முடியுமெனத் தெரிவித்தார். (ஓ-6)

# காணாமல் போனோர் விசாரணை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது

## மனித உரிமை ஆணைக்குழு

கடந்த காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணாமல் போனோர் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கிறது.

இதற்கமைய மாவட்ட மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் பெருமளவில் நிறைவடைந்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

மேலும் விசாரணை அறிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகள் கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-6)

# அரசியல் களத்தில் குதித்தார் ராம்தேவ் ஊழலை ஒழிக்கப் போவதாக அறிவிப்பு

(புதுடில்லி)



யோகா குரு பாபா ராம்தேவும் அரசியல் களத்தில் குதித்துள்ளார். அரசியலை தூய்மைப்படுத்துவதற்காக ஸ்வபிமான் அபியான் என்ற பெயரில் அரசியல் கட்சியை தொடக்கியுள்ளார்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் யோகா பயிற்சி அளிப்பதில் புகழ் பெற்றவர் பாபா ராம்தேவ். மன அழுத்தங்களை போக்கும் வகையிலான பல்வேறு யோகா கலைகளை கற்றுத் தருகிறார்.

இதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் யோகா முகாம்களை இவர் நடத்தி வருகிறார். தற்போது இவருக்கு அரசியல் ஆசை வந்துள்ளது. ஸ்வபிமான் அபியான் என்ற பெயரில் அரசியல் கட்சியை தொடக்கப் போவதாக இவர் அறிவித்துள்ளார்.

ராம்தேவ் கூறியதாவது,

அரசியலில் மாசுபடிந்துள்ளது. அதை தூய்மைப்படுத்துவதற்காகவே அரசியல் கட்சியை தொடக்கியுள்ளேன். அடுத்த லோக்சபா தேர்தலில் நாடு முழுவதும் உள்ள அனைத்து தொகுதிகளிலும் எங்கள் கட்சி சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவர்.

முதற்கட்டமாக ஒவ்வொரு லோக்சபா தொகுதியிலும் ஏழு முதல் 10 இலட்சம் உறுப்பினர்கள் வரை சேர்க்க திட்டமிட்டுள்ளோம். ஊழல் கறை படியாதவர்கள் மட்டுமே கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சரியான, தகுதியான நபரை அடையாளம் கண்டு, அவர்களை மட்டுமே வேட்பாளர்களாக நிறுத்துவோம். அதே நேரத்தில் நான் தேர்தலில் போட்டியிடமாட்டேன். எந்த பதவியையும் ஏற்க மாட்டேன்.

300 இலட்சம் கோடி ரூபாய்க்கு அதிகமான கருப்பு பணம், இந்தியாவில் இருந்து வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முறையான சட்ட விதிமுறைகளின் படி இந்த பணம் முழுவதையும் இந்தியாவுக்கு திருப்பிக் கொண்டு வந்து வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும். 2020ஆம் ஆண்டுக்குள் இந்த பணம் முழுவதையும் நம் நாட்டுக்கு கொண்டு வந்து விட வேண்டும்.

இதுமட்டும் நடந்துவிட்டால் சர்வதேச பொருளாதாரத்தில் இந்தியா அசைக்க முடியாத பலம் பெற்று விடும். வல்லரசு நாடாக உருவெடுக்கும். யோகா பயிற்சி கற்றுக் கொடுப்பவர்கள், அரசியல் ஆசையுடன் செயல்படுவதாக உ.பி. முதல்வர் மாயாவதி தெரிவித்துள்ளார்.

ஊழல் கறைபடிந்த அரசியல்வாதிகள் எங்களைப் போன்றவர்கள் அரசியலுக்கு வருவதை ஏற்க மாட்டார்கள். ஏழை மக்களுக்கு உதவுவதற்காக பணம் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர மாலைகளை உருவாக்க அவற்றை பயன்படுத்தக்கூடாது.

சமீபகாலமாக சிலர் ஆன்மீகத்தின் பெயரால் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இது கவலை அளிக்கும் செயல். இதுபோன்ற நபர்களுக்கு கடும் தண்டனை அளிக்க வேண்டும். இவர்களை தண்டிப்பதற்கு கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இவ்வாறு பாபா ராம்தேவ் கூறினார். (ஓ-6)

# மாயாவதிக்கு மீண்டும் ரூபாய் நோட்டு மாலை எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்கு அசரவில்லை



(லக்னோ)

ரூபாய் நோட்டு மாலை அணிவிக்கப்பட்டது தொடர்பான எதிர்க்கட்சிகளின் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளுக்கு உ.பி. முதல்வரும் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவருமான மாயா வதி சற்றும் அசரவில்லை.

நேற்று முன்தினம் நடந்த கட்சிக் கூட்டத்தில் மீண்டும் அவருக்கு ரூபாய் நோட்டு மாலை அணிவிக்கப்பட்டது.

இனிமேல் மாயாவதிக்கு பூமாலைக்கு பதில் ரூபாய் நோட்டு மாலை மட்டுமே அணிவிப்போம் என அக்கட்சியினர் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இரு நாட்களுக்கு முன் உ.பி. தலைநகர் லக்னோவில் பகுஜன் சமாஜ் கட்சியின் வெள்ளி விழா கொண்டாட்டங்கள் நடந்தன.

ஐந்து இலட்சம் தொண்டர்களை திரட்டி பிரமாண்ட பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இதற்காக 200 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகவும் ஒரு தகவல் உண்டு.

இந்த விழாவில் லக்னோவைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள் தங்கள் தலைவியை கௌரவிக்கும் வகையில் உ.பி. முதல்வர் மாயாவதிக்கு ரூபாய் நோட்டுகளால் உருவாக்கப்பட்ட பிரமாண்டமான மாலையை அணிவித்து அங்கு கூடியிருந்தவர்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தினர்.

இந்த மாலையில் இடம் பெற்றிருந்தவை அனைத்தும் ஆயிரம் ரூபாய் நோட்டுகள். மாயாவதிக்கு ரூபாய் நோட்டு மாலை போட்ட காட்சி கள் டி.வி. சேனல்களில் ஒளிபரப்பானதும் நாடு முழுவதும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. சமாஜ்வாடி காங்கிரஸ் போன்ற எதிர்க்கட்சிகள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்த மாலையை உருவாக்குவதற்கான பணம் எங்கிருந்து வந்தது என்பது குறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என அந்த கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

லோக்சபாவிலும் இந்த பிரச்சினை பெரிய அளவில் எதிரொலித்தது.

வருமான வரித்துறை அதிகாரிகள், இதுகுறித்து விசாரணையை தொடக்கியுள்ளனர்.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக நேற்று முன்தினம் காலை லக்னோவில் பகுஜன் சமாஜ் கட்சி நிர்வாகிகள் கூட்டம் நடந்தது.

இந்த விழாவில் முதல்வர் மாயாவதிக்கு மீண்டும் ஒரு பிரமாண்டமான ரூபாய் நோட்டு மாலை போடப்பட்டது.

இந்த மாலையின் மதிப்பு 18 இலட்சம் ரூபாய் என்றும் இதில் 1000, 500, 100 என பல்வேறு ரூபாய் நோட்டுகள் இடம்பெற்றுள்ளன என்றும் கட்சி நிர்வாகிகளே தெரிவித்தனர். (ஓ-6)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# கடலிற் காணப்படும் நச்சு விலங்கினங்களும் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுதலும்



இலங்கையின் வடபகுதி மீன்பிடிக்கு ஏற்ற சூழ்நிலைகளை சிறப்புறக் கொண்டு நிற்கும் பிரதேசமாகும். நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் மீன்பிடித் துறையின் கணிசமான பகுதி வடபகுதியின் மீன்பிடியிலிருந்து பெறப்பட்டது. பாரம்பரிய மீன்பிடி முறைகள் தொட்டு நவீன மீன்பிடிமுறைகளும் அறிமுகப் படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறைகள் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தப்பட்ட தடங்களின் மூலம் பின்னடைவினைச் சந்தித்துள்ள அதே வேளையில் மிகவும் முன்னேறிவரும் துறையாகவும் விளங்குகின்றது. மீன்பிடித் துறையானது மிகவும் இலாபகரமான ஒரு துறையாக இருப்பதுடன் பல்வேறு ஆபத்துகளையும் விபத்துகளையும் எதிர் கொண்டு மீளவேண்டிய ஓர் துறையாகவும் அமைந்துள்ளது என்பது கவலைக் குரிய விடயமாகும்.

இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, சுனாமி போன்றவையும் இவை தவிர சில கடல்வாழ் தாவர விலங்குகளினாலும் மனிதன் சில விபத்துகளையும் எதிர் கொள்ள வேண்டிய நிர்பந்தமும் ஏற்படுகின்றது. இக் கட்டுரையானது கடற் பிரதேசத்தில் வாழுகின்ற வெவ்வேறு கூட்டங்களைக் கொண்ட விலங்குகளினாற் சுரக்கப்படுகின்ற சில உடலுக்கு ஒவ்வாத நச்சுப் பதார்த்தங்களினால் மீன்பிடியாளர்களுக்கு ஏற்படத்தக்க ஆபத்துக்களையும் அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகளையும் விளக்குகின்றது. விலங்கியற் கள ஆய்வுகளினூடான உசாவுகைகளின் உதவியினாலும் இந் நஞ்சினாற் பாதிக்கப்பட்டவர்களின் நேர் காணலினூடாகவும் ஏனைய சில கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்க அங்கத்தவர்களினூடான உரையாடல்களின் அடிப்படையிலும் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இக் கட்டுரை எழுதப் படுகிறது.

**சில ஆபத்தை தரக்கூடிய முள்ளந்தண்டிலி விலங்குகளின் புறத்தோற்றம்**



தரை வாழ் அங்கிகளில் மட்டுமல்லாது கடல் வாழ் அங்கிகளிலும் நச்சுத் தன்மை கொண்ட விலங்குகள் காணப்படுகின்றன. பொதுவாக ஒவ்வோர் அங்கியும் தமது வாழிடத்தில் தம்மை நிலைப்படுத்தவும் அதனூடாக உணவூட்டல், இனப்பெருக்கம் மற்றும் ஏனைய அங்கிகளிடமிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவும் வெவ்வேறு நடத்தைக் கோலத்தினூடாக குறித்த சூழலில் தம்மை நிலை நிறுத்திக் கொள்கின்றன. அங்கிகளுக்கிடையிலுள்ள உருவவியல் மற்றும் ஏனைய பல காரணிகள் அவை பல்வேறு கூட்டங்களாக வகைப்படுத்தப் படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

கடல்வாழ் நச்சு விலங்குகளின் வகைகள் முள்ளந்தண்டிலி விலங்குகள் தொடக்கம் முள்ளந்தண்டுளி விலங்குகள் வரையும் காணப்படுகின்றன. இவ் விலங்குகள் நச்சுப் பதார்த்தங்களை வெவ்வேறு வழிகளிற் சுரந்து அவற்றின் மூலம் தமது இரையைப் பிடித்துச் செயலிழக்கச் செய்யவும் எதிரிகளை எதிர்க்கவும் அவைகளிடமிருந்து தப்பிக்கவும் இந்த நச்சுச் சுரப்பைப் பயன்படுத்துவதாக அறியப் பட்டுள்ளது. இவ்விலங்குகள் ஒவ்வொன்றும் தம்மிடமுள்ள விசேடித்த உறுப்புகளினால் வெவ்வேறு வகையான நச்சுப் பதார்த்தங்களைச் சுரப்பதன் மூலம் மேற்படி கருமத்தை ஆற்றுவதற்குச் சிறப்படைந்துள்ளன.

இவ்வாறு சுரக்கப்படும் இந் நச்சுப் பதார்த்தங்கள் மனிதனுக்கு பின்வரும் முறைகளிற் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

1. தொடுகையின் போது சுரக்கப்படும் நச் சுப் பதார்த்தங்கள் (Contact Irritants)
2. செலுத்தப்படக்கூடிய நச்சுப் பதார்த் தங்கள் (Injectable Venoms)
3. விழுங்கப்படக்கூடிய நச்சுப் பதார்த் தங்கள் (Ingestable Venoms)

**தொடுகையின் போது சுரக்கப்படும் நச்சுப் பதார்த்தங்கள்**

மனித உடற்பகுதியில் இவ்வகை விலங்குகளின் உடற்பகுதிகள் படும் போது குறித்த விலங்கின் உடற்பகுதியின் சிறப்பு வாய்ந்த உறுப்புகளினாற் சுரக்கப்படும் சுரப்பாகும். இச்சுரப்புகள் மனித உடலிற் படுவதனால் தோலிற் கடுமையான எரிவு, சொறி போன்றன ஏற்படும். இதனை ஏற்படுத்தவல்ல விலங்குகள் வருமாறு. (அட்டவணை (1)

**அட்டவணை 1**

| விலங்கு வகை | பாதிப்பு ஏற்ப்டும் பொறிமுறை | பாதிப்பு அறிகுறிகள் | முதலுதவியும் சிகிச்சையும |
|---|---|---|---|
| கடல் அனிமணி **(Sea Anemone)** | பரிசக்கொம்புகள் (tentacles) மூலம் தடவுதல் | எரிவு சொறி உணர்வு சிவந்து வீங்குதல் | நீர், கடல் நீரினால் நன்றாக கழுவுதல் பாதிப்பு ஏற்பட்ட இடத்தில் பனிக்கட்டி ஒத்தடம் (Ice massage) வழங்குதல், கூடிய பாதிப்பு எனின் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும். |
| விழுது மீன்கள் **(Jelly fish)** | பரிசக் கொம்புளினால் உரோஞ்சுதல், ஒட்டுதல் | உரோஞ்சுதல் ஏற்படுத்தப்பட்ட இடத்தில் குத்து வலி, எரிவு சிவந்து வீங்குதல் | பாதிக்கப்பட்ட இடத்தில் வினாகிரி (Domestic vinegar) கொண்டு கழுவுதல், நன்று கூடிய பாதிப்பு எனின் மருத்துவ சிகிச்சை பெறல் வேண்டும் |

பொதுவாக இவ்வகை விலங்கு கள் மனித சஞ்சாரம் ஏற்படும் போது சற்று நகர்ந்து வேறிடம் செல்லக் கூடி யவை. அத்துடன் மனித உடலில் மிகவும் வனமையாக ஒட்டிக் கொள்ளவும் கூடியன. இவற்றை மனித தோலில் இருந்து பிரிப்பது கடினம். இதனை பிரிப்பதற்கு வினாகிரி (Domestic vinegar) இனை அப் பிரதேசத்திற்கு பிரயோகிப்பதன் மூலம் அதனைப் பிரிக்க முடிவதாக கூறப்படுகின்றது.

இவை தவிர இவற்றின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் இடங்களில் உள்ள நீர்ப்பரப்பில் இதன் நச்சுச் சுரப்பு அதிகமாகக் காணப்படும் வாய்ப்பு உள்ளது. இப்பிரதேசத்துள் பிரவேசிக்கும் மனித தோலில் மேற்குறித்த தாக்கங்கள் ஏற்படும். இவ்வாறான இடங்கள் இனங் காணப்படின் அவை அலுவலக முறைப்படி அறிவிக்கப்பட்டு சமிக்ஞையிடப்பட வேண்டும். இதனால் அதனுள் நுழையும் நபர் எச்சரிக்கையுடன் நுழைய முடியும் அத்துடன் நீர் உட்புகாத அங்கி (Water proof jackets யாழ்ப்பாணத்தில் இவ் வகை அங்கிகள் பாவனையில் உள்ளது) அணிவதன் மூலம் இவ்வகை தாக்கத்திலிருந்து மீள முடியும்.

**செலுத்தப்படத்தக்க நச்சுப் பதார்த்தங்கள்**

இவ்வகை நஞ்சானது குறிப்பிட்ட விலங்குகளினால் உருவாக்கப்படுகிறது. இவ் அங்கிகளினால் காயத்திற்குள்ளாகும் மனித உடற்பகுதியினுள் நஞ்சானது செலுத்தப்படுவதன் மூலம் மனிதனுக்கு தீமை ஏற்படுத்தப்படுகிறது.

இந் நஞ்சு வகைகள் இதயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும (Cardio toxic), நரம்புத் தொகுதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் (Neurot oxic), தோலில் அரிப்பையும் புண்ணையும் ஏற்படுத்த வல்ல (Derm ato necrotic) நஞ்சுகள் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. (அட்டவணை 2)

இவ்வாறாக விலங்குகளிடமிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு கற்களைக் கொண்ட இடுக்குகளில் மீன் பிடிக்கும் போது மிகவும் அவதானத்துடன் செயற்படுவதுடன் கைகளுக்கு கையுறையும் கால்களுக்கு தடித்த பாதணிகளையும் அணிவது தகுந்த பாதுகாப்பைத் தரும்.

ஞானமுத்து அன்ரன் சாள்ஸ்
ஆராய்ச்சி உதவியாளர்,
விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**விழுங்கப்படக்கூடிய நச்சுப் பதாரத தங்கள் (Ingestable Venoms)**

முதன்முதல் இந் நச்சுப் பதார்த்தம் Tetradontiformes (நான்கு பற்கள் கொணடு உருவாக்கப்பட்ட சொண்டு போன்ற உருவம் கொண்ட மீன் குடும்பம்) வகை கிளி மீன் (Parrot fish), குட்டுறு (Box fish) மீனகளில் இனங்காணப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 17

**மனிதனின் தேவைக்கு சந்தைப்படுத்து முகமாக பிறப்புரிமைப் பொறியியல் (genetic engineering) மூலம் முதன் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட ஓமோனின் பெயர் யாது?**

**விடைகளை 31-03-2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. V. Sendil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மீன்பிடியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 15க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**Thuvaraka Thayalan**
Neervely South,
Neervely.

**புதிர் 16 இற்கான விடை : Polio**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 17

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
கையொப்பம் :..........................................

# உங்கள் வாக்குகளால் எனது கணவருக்கு நியாயம் கிடைக்கட்டும்

## அனோமா பொன்சேகா வேண்டுகோள்



(கொழும்பு)

மனமுடைந்த நிலையில் இருக்கும் வாக்காளர்கள், பொதுத் தேர்தலில் வாக்களிக்காமல் இருக்க வேண்டாம். அது அரசாங்கத்தின் கரங்களையே பலப்படுத்தும். இந்த அரசாங்கத்தை நாம் வீழ்த்த வேண்டும். ஊழலை ஒழித்து ஜனநாயகத்தை நிலைபெறச் செய்ய வேண்டும்.

உங்கள் வாக்குகள் மூலம் என் கணவருக்கும் நியாயம் கிடைக்கும். என் கணவரின் பெயரை யுத்த வரலாற்றில் இருந்து அழிக்க சிலர் முனைகின்றனர். அது அவர்களின் பகற்கனவு மட்டுமே! நாட்டில் சுதந்திரக்காற்று என் கணவராலேயே வீசுகின்றது என ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்தார். ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் அண்மையில் குருணாகல் சத்தியவாதி திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெற்றிவீரனான என் கணவரின் பெயரை யுத்த வரலாற்றிலிருந்து நீக்க ராஜபக்ஷ குடும்பம் முனைகிறது. அது வெறும் பகற்கனவு மட்டுமே! என் கணவரின் முயற்சியின் பயனாகவே இன்று நிம்மதியாக வாழ முடிகின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்த பின்னரே உண்மையான புதுவருடத்தைக் கொண்டாட முடியும். அவர் குண்டடிபட்ட வேளை, அனைத்து மக்களின் ஆசீர்வாதத்துடனேயே குணமாகினார். அதன் பின்னரே அவர் முழுநாட்டிற்கும் சொந்தம் என நான் எண்ணினேன்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க நாம் முன் வந்துள்ளோம். மக்களின் ஒத்தாசை எமக்கு அவசியம்.

மனமுடைந்த நிலையில் மக்கள் வாக்களிக்காமல் வீட்டிலிருக்க வேண்டாம். ஊழலை ஒழித்து, ஜனநாயகத்தை வென்றெடுக்க வாக்கு அவசியம். அந்த வாக்குகள் மூலம் என் கணவருக்கும் நியாயம் கிடைக்கும்.

அதற்காகவே நான் இலங்கை முழுவதும் சென்று உங்கள் அனைவரையும் சந்திக்கின்றேன். எட்டாம் திகதி உங்கள் தீர்மானம் அனைவருக்கும் விடியலை உருவாக்குவோம்.

தொடர்ந்து மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உரையாற்றுகையில்,

எதிர்வரும் தேர்தலில் மக்கள் புதியதொரு முடிவை வழங்கத் தயாராக உள்ளனர். புதிய பாராளுமன்றில் நாம் வெற்றிக் கிண்ணத்தை ஜெனரல் பொன்சேகா தலைமையில் கையி லேந்தி வலம் வருவோம். சிறையிலிருந்தே பொன்சேகா அரசியல் புரிவார். அவரை அடிபணிய வைக்க அரசால் முடியாது.

அரசாங்கம் பொன்சேகாவை சிறையிலடைத்து பொதுத் தேர்தலை வெல்லப் பார்த்தது. எட்டாம் திகதி நாம் சரத் பொன்சேகாவின் வெற்றிக் கிண்ணத்தை கையிலேந்தி போடி இடுகின்றோம். அதற்காக அனைவரும் ஒத்துழைப்பை நல்க வேண்டும். அரசாங்கம் இன்னும் யுத்தத்தை காட்டியே மக்களை ஏமாற்றி வருகின்றது.

ஜனாதிபதி கூறுகின்றார், ஆசியாவில் இலங்கையை ஆடம்பரமிக்க நாடாக மாற்றுவதாக அதை அவரால் செய்ய முடியாது. இலங்கையை ஆசியாவில் கடன்கார நாடாக மாற்றவே அவரால் முடியும். மனித உரிமைகளை மீறச் செய்யப்படும் அவருக்கு நாட்டை முன்னேற்ற முடியாது.

இன்று தேர்தல் ஆணையாளர் வெறும் செல்லாக் காசாக ஆக்கப்பட்டுள்ளார். ஊடகச் சுதந்திரம் இல்லை. ஜனநாயக விரோத அரசாங்கமே இன்று ஆட்சி செய்கின்றது. நாம் ஜனநாயகத்தை நிலைநாட்ட இறுதிவரை போராடுவோம். மக்கள் எமக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எனவே, அனைவரும் இணைந்து இந்த அரசை தோற்கடிக்க அனைவரும் அணி திரள்வோம் என்றார். (2-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் கடந்த 2006/2007 கல்வியாண்டில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆங்கில, கணித, விஞ்ஞான, உடற்கல்வி நீருயிர் வளதொழில் நுட்பம் ஆகிய நெறிகளின் ஆசிரிய மாணவர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட அனைத்து ஆசிரிய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் எம். இக்னேசியஸ் கேட்டுக் கொள்கின்றார். ◎

## விபத்துக்களில் இளைஞர்களே அதிகம் பலியாவதாக தெரிவிப்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற விபத்துகளில் பெருமளவில் இளைஞர்களே பலியானதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதி விபத்துகளுக்கு இலக்கானவர்களில் 70 வீதமானவர்கள் 15 முதல் 45 வயதிற்குட்பட்டவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெனியாய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் 25 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் வீதி விபத்துக்கு உள்ளானவர்களென அவசர விபத்துப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்தார்.

இலங்கையில் 5 மணித்தியாலயங்களுக்கு ஒருமுறை வீதி விபத்தினால் தலா ஒருவர் வீதம் உயிரிழப்பதாகவும் இதன் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு வீதி விபத்தினால் இறப்பவர்களின் எண்ணிக்கை 2200 க்கும் அதிகமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சாரதிகளின் கவனயீனமே விபத்துகளுக்கான பிரதான காரணமாகுமெனப் பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது. (2-6)

## பொன்சேகாவின் சில நடவடிக்கைகளால் அவருக்கே அதிக பாதிப்பு - டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் சில நடவடிக்கைகளினாலேயே அவருக்கு அதிக பாதிப்பு ஏற்படுவதாக போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முரண்பாடான செயற்பாடுகளினால் தாமே தம்மை பிரச்சினையில் ஆழ்த்திக் கொள்வதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் கோதபாய ராஜபக்ஷ ஆகியோர் மீது பொன்சேகாவிற்கு இனந்தெரியாத காழ்ப்புணர்ச்சி காணப்படுவதாகவும் ஏன் ஜனாதிபதி மீது இவ்வளவு பொறாமைப் படுகின்றார் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சமான விடயம் என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தாது தாம் உறங்கப் போவதில்லை என அண்மையில் செனல் 4 தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அறுபது ஆண்டுபகுதியில் இலங்கை இராணுவத்திற்கு ஜெனரல் சரத் பொன்சேகா அளவிற்கு எவரும் களங்கம் ஏற்படுத்தவில்லை. தற்போது சரத் பொன்சேகா தம்மை ஓர் நேர்மையான சிறந்த அரசியல் வாதி என வெளிக்காட்டிக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## ஐரோப்பிய கண்காணிப்பாளருக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை

### மங்கள சமரவீர



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஐரோப்பிய கண்காணிப்பாளர்களுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் விடுத்த கோரிக்கைக்கு இன்னமும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அனுமதி வழங்கவில்லை என்றும் இதனை நிரூபிக்க போதியளவு ஆதாரங்கள் தம்மிடம் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டுமாயின் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் மிகவும் இன்றியமையாததென வலியுறுத்தியுள்ளதுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக ஐரோப்பிய கண்காணிப்பாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்காவிட்டால் அவர்களினால் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடக்கூடிய சாத்தியம் கிட்டாது என மங்கள சமரவீர சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)

## கடலிற் காணப்படும் நச்சு விலங்கினங்களும்...

(11ஆம பக்கத் தொடர்ச்சி)

இந்த நஞ்சு Tetradoxin (TTX CAS Number [4368-28-9] ) என அழைக்கப்படுகிறது. இம் மீன் இனங்கள் தவிர சில கடல்வாழ் அல காக்களிலும் (*Jania spp.*) நட்சத்திரமீன் (Star fish), சில நண்டுகள் போன்றவற்றி லும் இந்த நஞ்சு சுரக்கப்படுவது அறி யப்பட்டுள்ளது.

இவ்வாறான நச்சுப் பதார்த்தங்கள் சில தாவர அல்காக்களில் வாழும் பற்றீரியாக்களினாற் சுரக்கப்படுவதாகவும் இவற்றை உணவாக்கும் மீன் வகை களில் இந் நுண்ணங்கிகள் தொற்றிக் கொள ளுவதாகவும் இவ்வாறு தொற்றுக்குள் ளான மீன்களின் ஈரலில் இந்நச்சுப் பதார் த்தம் செறிவாக்கப்படுவதாகவும் அறி யப்பட்டுள்ளது. இவ்வகை நச்சுகள் மேற் பரப்பு நரம்புக் கணத்தாக்க கடத்தப்படும் பாதையில் தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் கணத்தாக்கம் கடத்தப்படுவதை தடுக்கும். இதனால் விலங்குடலில் உணர் விழப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

இவற்றைவிட ஏனைய மீனகளின் முட்களினாற் குத்தலுக்குள்ளாதலும் கடற பாம்புகளின் கடிக்கிலக்காதலும் ஏனைய சுறா, திருக்கை போன்ற விலங்குகளின் தாக்குதலுக்கு ஆளாதலும் நேரிடலாம். இதன் போது ஏற்படத்தக்க இரத் தப்போக்கு களாற் பாதிப்படையாமல் இருப்பதற்காக குருதிப்பெருக்கினை கட்டுப்படுத்தும் முதலுதவிகள் தெரிந்திருப்பதுடன் ஒவ்வோர் கடற்கலத்திலும் முதலுதவிப் பெட்டிகள் பொருத்தப்படுவதும் இன்றியமையாததாகும். எமது பிரதேசக் கடற் பரப்பிலும் இவ்வாறான தாக்கங்கள் தொன்று தொட்டு மக்களால் உணரப்பட்டு வந்துள்ளது. இருப்பினும் அண்மைக் காலமாகவும் இவ்வாறான நச்சு விலங்குகளாற் பாதிப்புகளுக்குள்ளான மக்களும் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் மூன்று தெடக்கம் நான்கு நாட்கள் மிகவும் கூடிய குத்து வலி வேதனைகளையும் உணர்ந்துள்ளனர்.

மேற்படி விலங்குகளும் அவற்றினால் ஏற்படும் பாதிப்பும், முன்னெச்சரிக்கை, முதலுதவி என்பவற்றினைக் கருத்திற் கொள வதனால் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் எண்ணிக்கையை இழி வளவாக்க முடியும். இவ்வாறு தொடர்ச்சியாக பாதிப்புக்குள்ளாகும் பிரதேசங்கள் இனங்காணப்பட்டு அங்குள்ள கடற்சூழல் அளவுருக்களின் (Marine ecological parameters) ஆய்வு விஞ்ஞான மருத்துவ மற்றும் சமூக பொருளாதாரம் உட்படப் பல் துறைசார் கூட்டுமுயற்சியினால் மேற் கொள்ளப்பட வேண்டும். இது சாத்திய மாகும் பட்சத்தில் இதனூடு வெளிக் கொணரப்படும் முடிவுகள் மீன்பிடித் துறையை மேலும் முன்னேற்ற வழி வகுக்கும்.

❖❖❖

அட்டவணை 2

| விலங்கு வகை | பாதிப்பு ஏற்படும் பொறிமுறை | பாதிப்பு அறிகுறிகள் | முதலுதவியும் சிகிச்சையும் |
|---|---|---|---|
| கூம்பு நத்தை (Cone Snail) | திடீரென துள்ளிக் குதித்து தாக்கு தல் (Dart like mechanism) | எரிவு வலி, வேதனை, தலைசுற்றல், உணர்ச்சியற்ற நிலை (Numbness), குருதிப்பெருக்கம் | குருதிப்பெருக்கு தடுப்பு, தொடர்ச்சியான உணர்ச்சியற்ற நிலை தோற்றுவிக்கப்படின் மருத்துவ சிகிச்சை பெறல் வேண்டும். |
| நீல வளையக் கணவாய் (Blue ringed octopus) | சொண்டு போன்ற (Beak like teeth) பற்களினால் ஏற்படும் சிராய்ப்புக்களும் கிழிவுகளும் | படபடப்புடன் கூடிய வலி, குருதிப் பெருக்கு,மயக்கம் | குருதிப்பெருக்கு தடுப்பு, காயத்தினை சவர்க்காரம், நீர் கொண்டு கழுவுதல் |
| முருகைக் கற்கள் (Corals) | கூரியமுனைகளினால் ஏற்படும் சிராய்ப்புகளும் கிழிவுகளும் | குருதிப்பெருக்கம், அரிப்பு, சொறி உணர்வு, சிறிய வீக்கம். | குருதிப்பெருக்கு நிறுத்தல், சவர்க்காரம் நீர் கொண்டு கழுவுதல், ஆழமான வெட்டுகள் எனின் மருத்துவ உதவியினை நாடுதல் |

மனச்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது. -ஜேம்ஸ் கிளார்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழர் சிந்தனையைத் தூண்டும் பேராயர் ஜெபநேசனின் கருத்து

'கிரீடம் நிலத்தில் விழுந்து கிடந்தால் அதனை எடுத்து அணிந்து கொள்ள யார்தான் விரும்ப மாட்டார்கள்' மனோன்மணியத்தில் காணப்படும் இவ் வசனத்தை மேற்கோள்காட்டி வலம்புரியின் நேற்றைய பதிப்பில் விமர்சனக்கட்டுரையை எழுதியவர் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள்.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயராக இருந்த கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள் மிகச் சிறந்த தமிழறிஞர்.

பேரறிஞர் என்ற உயரிய விருதின் சொந்தக்காரர்.

பேராயராக இருந்த போதிலும் சமயம் கடந்த சிந்தனையாளர். இதனால் அவரை சமயத் தலைவராக அன்றி தமிழ்ப் பேரறிஞர் ஆகவே ஈழத்தமிழினம் பார்க்கின்றது.

அந்த அற்புத சிந்தனையாளர் எழுதிய விடயம் எங்கள் எல்லோரினதும் இதயங்களை தொட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களை அறிய ஏழுபிறப்பு எடுக்க வேண்டும் என கடந்த 15.03.2010 அன்று வெளியான வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

இவ்வாசிரியர் தலையங்கம் சிந்தனையைத் தூண்டுவதாகக் குறிப்பிடும் பேராயர், அது தொடர்பில் சிறந்ததும்-இன்றைய காலத்திற்குப் பொருத்தமானதுமான விமர்சனக் கட்டுரையொன்றை எழுதியிருந்தார்.

வலம்புரி எழுதிய ஆசிரியர் தலையங்கம் சிந்தனையைத் தூண்டுகின்றதோ இல்லையோ தெரியவில்லை ஆனால் பேராயர் எஸ்.ஜெபநேசன் அவர்கள் எழுதிய கருத்து தமிழ் மக்கள் அனைவரையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்து மக்கள் என்பது கூட ஈழத்தின் தமிழ் மக்களை விழிப்பதாகவே பொருள் கொள்ள வேண்டும்.

அவ்வகையில் யாழ்ப்பாண மக்கள் அறிவிலும், சமூக விழுமியப் பண்பாட்டிலும் ஆன்மீகத்திலும் நிறைவுடையவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் 'மாற்றம்' என்பதில் நாம் பின்னடைவையே கண்டுள்ளோம்.

சன்லைற் சோப், ரலிச் சைக்கிள், சிங்கர் மெசின் என்ற ஒரு வரையறையை எப்படி எங்கள் நுகர்வில் இறுக்கமாகக் கடைப்பிடித்தோமோ அந்த இறுக்கத்தை எங்கும், எதிலும் கடைப்பிடிக்கும் இயல்பினராக நாம் வாழ்வது மிகப் பெரும் வரலாற்றுத் தவறாகும்.

இந்தத் தவறு உடைக்கப்பட வேண்டும். எதனையும் சிந்தித்து சீர்தூக்கி ஆராயும் தன்மை எங்களிடம் இல்லாமல் போகுமாயின் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாறும் பரிதாபத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

எனவே முதலில் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். இப்போது கூட வேட்பாளர்கள் பலர் உச்சமான வாக்குறுதிகளை கொட்டுகின்றனர்.

நாம் எதைக் கூறினாலும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நினைப்போடு இருப்பவர்களை தமிழ் மக்கள் முதலில் மாற்ற வேண்டும்.

கற்பனைகள், பசப்பு வார்த்தைகள், ஏமாற்று நாடகங்கள் அனைத்தையும் உடைத்தெறிய வேண்டும்.

நீங்கள் ஏமாற்றுவது எங்களுக்குத் தெரியும் என்பதை நிரூபிக்க வேண்டும். அப்போது தான் தமிழ் மக்களிடம் செல்லும் போது-அவர்களிடம் வாக்குறுதிகளை வழங்கும் போது நிதானமாக இருக்க வேண்டும் என்ற புத்தி வேட்பாளர்களிடம் உற்பத்தியாகும்.

## அதிக அளவிலான சுவரொட்டிகள், பதாகைகள் இன்னமும் அகற்றப்படவில்லை - பவ்ரல்

(கொழும்பு)

அதிகளவிலான சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் இன்னமும் அகற்றப்படவில்லை என பவ்ரல் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. இதற்கமைய 1650க்கும் மேற்பட்ட பதாகைகள் மற்றும் 450 சட்டவிரோத பேனர்கள் இன்னமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையுடன் சட்டவிரோத பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றும் பணிகளை பூர்த்தி செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவிடம் கோரியிருந்தார்.

எனினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர்களது பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான 1418 கட் அவுட்கள் சட்டவிரோதமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக பவ்ரல் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 241 கட்அவுட்கள் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களினால், சட்டவிரோதமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பதாகைகள் மற்றும் பேனர்களை உரிய காலப்பகுதிக்குள் அகற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாகவும் அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் போட்டியிடுவதனால் சட்டவிரோத பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது சிரமமான காரியம் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## வேட்பாளர்களின் குணநலன், ஆற்றல்கள் அடிப்படையிலேயே தெரிவு இடம்பெறவேண்டும்

### பந்துல குணவர்த்தன தெரிவிப்பு


(கொழும்பு)

சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளின் அடிப்படையில் மக்கள் வேட்பாளர்களை தெரிவு செய்யக் கூடாது என நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மாறாக வேட்பாளர்களின் குண நலன்கள் மற்றும் பாராளுமன்றத்தில் அவர்கள் ஆற்றும் உரை ஆகியவற்றின் அடிப்படையிலேயே தெரிவு நடைபெற வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாராளுமன்ற உரைகளின் தரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறித்த விடயங்கள் தொடர்பில் பூரண தெளிவுடைய நபர்களே முன்பு பாராளுமன்றத்தில் உரைகளை ஆற்றினார்கள். எனினும் தற்போது விடய ஞான மின்றி நாகரீகமற்ற வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டு தங்களது வாதங்களை சில பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கின்றனர் என்றார்.

ஹன்சார்டில் பதியப்படுவதனால் ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாக பேச வேண்டுமென தமது தலைவர்கள் தமக்கு அறிவுறுத்தல் விடுத்தாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூவும் நீரும் போதும்

ஏழை மக்களால் இறைவனுக்கு காணிக்கை ஏதும் படைக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் இருக்கும். இந்த ஆதங்கத்தை மனதை விட்டு முதலில் ஒழிக்க வேண்டும். இதை ஒழித்தாலே செல்வளம் பெருகி விடும் என்பது நம்பிக்கை. ஆண்டவனை வணங்க உதிரிப்பூவும் தண்ணீரும் போதும். இதைக் கோயிலில் கொண்டு கொடுத் தாலே இறைவனின் அருள் கிடைத்து விடும். வீட்டில் சுவாமியை வணங்கும் போது மிகப் பெரிய படையலைப் படைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. படங்களில் பெரிய மாலைகளை மாட்ட வேண்டும் என எண்ண வேண்டாம். சிறிது பூவைத்தூவி தண்ணீரை படத்தின் கீழே இலேசாகத் தெளித்தாலே போதும். இறைவன் அன்பை மட்டுமே விரும்புகிறான். நமது பொருட்கள்அவனுக்குத் தேவைப்படுவதில்லை.

பூவைக் கொண்டு சிவனுக்கு அர்ச்சனை செய்து எமனையே வென்றவன் மார்க்கண்டேயன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 115

வழிபாடு செய்வதற்கு ஓர் உருவம் தேவை. மனத்துள்ளே இறையுருவத்தை நினைத்து வழிபடும் மனப்பக்குவம் எல்லோருக்கும் கிடையாது. எனவே அவர்களுக்கு ஓர் உருவம் தேவை. அந்த இறையுருவங்களைக் கோவில்களிலே இருத்தி வழிபாடு செய்யும் மரபு பல காலமாகத் தொடர்ந்து வருகிறது. இறையடியார்களில் முதன்முதலில் இறைவனுக்கு உரு அமைத்தவர் காரைக்காலம்மையாராகும். அவர் இயற்கையின் கோலத்திலே இறைவனைக் கண்டு பாடியுள்ளார். அவ்வாறு அவர் பாடுவதற்குப் புராண இதிகாசங்களில் கூறப்பட்ட செய்திகளே அடிப்படையாக இருந்துள்ளன.

திருஞானசம்பந்தருடைய பாடல்களில் இறைவன் கோலச் சிறப்பு விரிவாகப் பாடப்பட்டுள்ளது. பெரிய புராணம் சம்பந்தருடைய வாழ்க்கையைப் பாடியுள்ளது. மூன்று வயதிலேயே இறைவன் கோலம் கண்டு பாடிய செய்தி பெரியபுராணத்தில் சேக்கிழரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. " பித்தா பிறைசூடி " எனச் சுந்தரரும் இறைவன் திருக்கோலத்தைத் தனது முதற் பாடலிலே பாடியுள்ளார். சமயகுரவர்களில் பாடல்களிலே சிவனின் திருக்கோலம் மிக அற்புதமாகச் சொற்சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளது. சம்பந்தர் வயதில் இளையவராகையால் அவருடைய பாடல்களிலே திருக்கோலம் முதலிரு அடிகளிலே விளக்கப்பட்டிருக்கும். இறைவன் கோலத்தைப் பாடும் போது திருமுடியிலிருந்து வருணித்துப் பாடும் பண்பு அவருடைய பாடல்களிலே மலிந்துள்ளது. அவர் வரைகின்ற சொற்சித்திரம் அவருடைய மொழிப்புலமையையும் அழகுணர்வையும் நன்கு பறை சாற்றி நிற்கின்றது.


இறைவன் திருமுடிக் கோலத்தை நாம் நேரிற் காண்பது போன்ற ஓர் உணர்வைப் பாலடிகள் நன்கு உணர்த்தி நிற்கின்றன. சிவனின் முடியில் சூடப்பெற்ற துண்டப் பிறையைப் பற்றிச் சொல்ல வந்த சம்பந்தர் "வானத்துயர் தண்மதிதோய் சடை "எனக் குறிப்பிடுகிறார். வானத்தில் உயரத்தில் இருக்கும் குளிர்மையான பிறையைச் சூடிய சடையை எமது மனக் கண்ணில் காணவைக்கிறார். "தோய்சடை " என்ற தொடர் பிறை சூடப்பெற்ற முறைமையை நன்கு விளக்கி நிற்கிது. பிறையோடு சடையிலே மத்தமலரையும் சூடிய காட்சியையும் காட்டுகிறார்.

திருச்சடையின் அழகுக் கோலத்திற்கு அப்பால் அவர் காட்டும் அழகு இறைவியின் கோல அழகாகும். மான்விழியாள் ஒரு பாகமாக வீற்றிருப்பதைக் காட்டுகிறார். இறைவியின் திருக்கடைக்கண் பார்வையால் ஆட்கொள்ளப்பட்ட உணர்வு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அவர் பாடலில் துல்லியமாகத் தெரிகிறது. இளமைப் பருவத்தினராய சம்பந்தருக்கு இறைவியின் திருக்கண்களின் தோற்றம் உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றது. ஆனால் அதில் அவர் ஆழ்ந்து போய்விடவில்லை. இறைவனோடு ஒரு பாகமாக வீற்றிருக்கும் அற்புதக் காட்சியிலே ஆழ்ந்து போய் விடுகிறார். தேவியின் தேனொத்த மென்மொழி பற்றிப் பாடுகிறாள். பெண்களின் மென்மொழியைக் கேட்ட சம்பந்தர் அதற்கு மூலகாரணமான தேவியின் அருள்மொழி பற்றிய நினைவில் தோய்ந்துவிடுகிறார் . அடுத்து அவருக்கு இறைவன் ஆடும் திருநடனக் கோலம் நினைவுக்கு வருகிறது. காட்டிலே கையில் எரியை வைத்து நடமாடும் அழகுக் கோலம் பற்றிக் காரைக்காலம்மையாரும் பாடியுள்ளார். சிவனின் திருநடனக் கோலத்தின் அழகு சம்பந்தருடைய உள்ளத்திலே புத்துணர்வை ஏற்படுத்துகிறது. திருவீங்கோய் மலையிலே இக் காட்சியைக் காண வைக்கிறார்.

"வானத்து உயர் தண்மதிதோய் சடைமேல் மத்த மலர் சூடித்
தேன் ஒத்தன மென் மொழி மான் விழியாள் தேவிபாகமாகக்
கானத்து இரவில் எரி கொண்டாடும் கடவுள் உலகேத்த
ஏனத்திரன் வந்திழிஞ் சாரவ் ஈங்கோய் மலையாரே "



பான் ஏசியா வங்கி நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வங்கியின் கிளையை நாடாவெட்டி திறந்துவைப்பதையும், வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.ஆனந்தராஜா மங்கல விளக்கேற்றுவதையும், வங்கியின் தலைவர் ஏ.ஜி.வீரசிங்கம், யாழ்.வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.ஸ்ரீனிவாசன் ஆகியோர் உரையாற்றுவதையும், வாடிக்கையாளர் வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதையும் படங்களில் காணலாம். ( படங்கள்:-றம்சன்ராஜ்)

# பொருளாதாரச் செயற்பாட்டிற்கு ஆதரவு; நாணயக் கொள்கையில் மாற்றமில்லை

## மத்திய வங்கி அறிவிப்பு

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 3.1 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்ட அதே வேளையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (அடிப்படை=2002) ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் ஜனவரியில் 6.5 சதவீதத்திலிருந்து பெப்ரவரியில் 6.9 சதவீதத்திற்கு மிதமான எவு அதிகரித்தது. நிரம்பல் நிலைமைகளின் மேம்பாடு மற்றும் விலை அழுத்தங்களினைக் குறைப்பதற்காக எடுக்கப்பட்ட பல்வேறு கொள்கை வழிமுறைகளின் காரணமாக இலங்கையின் பணவீக்கம் அடுத்துவரும் மாதங்களில் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, முக்கிய துறைகளின் செயலாற்றம் உள்நாட்டுப் பொருளாதாரம் படிப்படியாக வளர்ச்சியடைவதனைக் குறித்து நிற்கின்றது. கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளின் செயலாற்றமும் வேளாண்மைத் துறையின் வலுவான செயலாற்றமும் 2010 இற்கான உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை உயர்த்தியுள்ள அதேவேளை பங்குச் சந்தையின் அதிகரித்த செயற்பாடு உள்நாட்டு பொருளாதாரம் மீதான முதலீட்டாளரின் நம்பிக்கை உயர்வடைந்துள்ளதனைப் பிரதிபலிக்கின்றது.

சவால்மிக்க உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிலைமைகள் சாவல்மிக்கதாக இருந்தபோதும் நிதியியல் முறைமை அதன் ஆற்றல் தன்மையையும் இலாபத்தன்மையையும் மேம்படுத்தியுள்ளது.2009 முழுவதிலும் தொடர்ந்த மத்திய வங்கியின் நாணயக் கொள்ளை தளர்த்துகைக்கு பதிலுறுத்தும் வகையில் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் சீராக்கப்பட்டு வருகின்றன. பல சந்தைக் கூறுகளுக்கிடையில் வட்டிவீதங்கள் இதுவரையில் ஒரு கணிசமான வீழ்ச்சியைக் காட்டியுள்ளதுடன் இது கொடுகடன் பாய்ச்சலில் ஒரு சாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய அபிவிருத்திகளினைக் கருத்திற்கொண்டு நாணச் சபை நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட அதன் கூட்டத்தில் பொருளாதார செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கும் வகையில் அதன் தற்போதைய நாணயக் கொள்கை நிலையை மாற்றமின்றிப் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது என அதில் குறிப்பிடப்படுகிறது.

## நாணய மாற்று வீதம் -18.03.2010

| நாணயம் | வாங்கும் விலை (ரூபாய்) | விற்கும் விலை (ரூபாய்) |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.35 | 114.84 |
| ஐக்கிய இராச்சியம் பவுண் | 172.97 | 176.28 |
| யூரோ (யூரோ வலயம்) | 154.93 | 158.17 |
| சுவிற்சர்லாந்து பிராங்க்ஸ் | 106.60 | 109.63 |
| டொலர் (கனடா) | 111.18 | 114.49 |
| டொலர் (அவுஸ்திரேலியா) | 103.97 | 106.51 |
| டொலர் (சிங்கப்பூர்) | 81.07 | 82.76 |
| யென் (ஜப்பான்) | 1.2506 | 1.28 |

# NDB வங்கியின் புதிய நிறைவேற்று அதிகாரியாக ரஸல் டிமெல் நியமனம்



NDB வங்கியின் மேலதிக பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரஸல் டி மெல்லை உடனடியாக நியமிப்பதற்கு வங்கியின் தலைவரும் பணிப்பாளர் சபையினரும் தீர்மானித்துள்ளனர். மத்திய வங்கியின் அங்கீகாரம் கிடைத்ததும் 2010 மார்ச் 26ஆம் திகதியில் இருந்து பிரதம நிறைவேற்று அதிகாரியாக இவர் நியமனம் பெறுவார். நாட்டிற்கு வேறுபட்ட துறையில் தனது சேவையை வழங்க .இரான் விக்கிரமரத்ன பதவி விலகியதை அடுத்து இந்த நியமனம் இடம்பெறுவதாக NDB வங்கி இயக்குநர் சபை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அது வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வங்கியின் தலைமைத்துவ மாற்றம் பற்றி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தலைமைத்துவ ஆலோசனை நிறுவனமும் வங்கியும் சென்ற வருட நடுப்பகுதியில் இருந்து தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் தொடர் உரிமை, திட்டமிடல் சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உள் பாய்ச்சல்களை கருத்திற்கொண்டு வங்கியின் இலட்சியங்கள் மற்றும் நீண்டகால வழிமுறைகள் என்பனவற்றையும் அவற்றின் அடிப்படையிலான தலைமைத்துவத் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளின் சகல கட்டங்களிலும் வங்கியின் பணிப்பாளர் சபை மிகுந்த அக்கறை காண்பித்தது.

பிரிட்டனின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிலையத்தின் இணை அங்கத்தவராகவுள்ள ரஸல் டி மெல் NDB வங்கியில் முக்கியமாக கூட்டிணைப்பு வங்கிப் பிரிவில் 30 வருட காலம் சேவையாற்றியுள்ளார். இதற்கு முன்னராக வங்கியின் குழுஅபாய முகாமைத்துவ பிரிவின தலைவராகவும் NDB வங்கியின் உப தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். NDB வங்கியில் இணைந்துகொண்ட ஆரம்ப காலகட்டத்தில் திட்ட நிதித் துறையில் முக்கிய பதவிகளை வகித்ததோடு, வங்கி நிதியுதவியுடன் இலங்கையில் நடைமுறைக் கிடப்பட்ட பல வர்த்தக திட்டங்களின் மதிப்பீடு, செயற்படுத்தல், வசூலிப்பு கட்டங்களின் குழு அங்கத்தவராகவும்/குழுத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பங்காளித்துவ அமைப்புக்களுடன் இணைந்து இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. கடந்த இரண்டு தசாப்தகாலமாக NDB வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்ட முக்கிய வர்த்தக திட்டங்கள் பலவற்றிற்கு இவர் பங்காளியாக இருந்து வந்துள்ளார். NDB குழுமத்தினுள் அபாய முகாமைத்துவ நடவடிக்கைகளை புனரமைப்பதில் இவர் முக்கிய பங்கு வகித்துள்ளார். NDB குழும நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளினது அங்கத்தவராகவும் இவர் கடமையாற்றி வருகின்றார். இலங்கையிலும், பிரான்ஸின் INSEAD உட்பட பல நிறுவனங்களிலும் விரிவான பயிற்சியை பெற்றுள்ள இவர் NDB வங்கியில் இணைந்துகொள்வதற்கு முன்னர் தனியார்துறை நிறுவனங்கள் பலவற்றில் பணியாற்றியுள்ளார்.

வளர்ச்சி, சேவை, இலாபமீட்டும் தன்மை, நாட்டிற்கான பங்களிப்பு என்பனவற்றில் பங்குதாரர்களின் அர்ப்பணிப்பை NDB வங்கி தொடர்ந்தும் கருததிற் கொண்டுள்ளது. இலாப அதிகரிப்பு, பங்குதாரர்களுக்கு நிலைபேறான நீண்ட கால பலாபலன்களை வழங்குதல், குறைந்தளவிலான NPL பலமான ஐந்தொகை என்பன நாட்டில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் வர்த்தக வங்கிகளில் ஒன்றாக NDB வங்கியை இடம்பெறச் செய்துள்ளன.

மாலைதீவிலும் பங்களாதேஷிலும் அதன் பிராந்திய செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. விரிவடைந்து வரும் கிளையமைப்பின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் பலதரப்பட்ட வர்த்தக வங்கிச் சேவைகள் NDB வங்கியினால் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக சகலவித வங்கிச் சேவைகள், கூட்டிணைப்பு வங்கிச் சேவை, திட்ட நிதி நடவடிக்கைகள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிதியுதவி உட்பட முழு அளவிலான வங்கி மற்றும் நிதிச் சேவைகளை NDB குழுமத்தின் வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும். முதலீட்டு வங்கிக் குழுமத்தின் மூலம் முதலீட்டு வங்கி நடவடிக்கைகள், பங்குப் பரிவர்த்தனை, சொத்து முகாமைத்துவம் என்பனவற்றையும் அவிவா NDB வங்கி காப்புறுதி மூலம் காப்புறுதிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் வழங்குவதன் அடிப்படையில் NDB வங்கி உண்மையில உலகளாவிய வங்கியாகத் திகழ்கிறது,

இலங்கையில் Fitch Rating தர நிர்ணய அமைப்பினால் வழங்கப்பட்ட AA(lka) மதிப்பீடு, வங்கித்துறையில் கிடைத்த உன்னத மதிப்பீடு என்பதோடு, மூலதன தளம், இலாபமீட்டும் தன்மை, சொத்துக்களின் தரம் என்பனவற்றின் அடிப்படையில் NDB வங்கியின பலம் வாய்ந்த நிதி இருப்பும் பிரதிபலிக்கின்றது. தகுதி, நேர்மை என்பன தொடர்பாக உயர்தரங்களை பேணிவரும் NDB வங்கி இலங்கையில் உலகத் தரத்திலான வங்கியாக விளங்குவது என்ற அதன் குறிக்கோளை அடையும் பாதையில் உறுதியாக முன்னேறிச் செல்கிறது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வணிகவலம்

ஆர்.யூ.பாலமுருகன்

## தங்க இறக்குமதிகள் மீதான சகல தீர்வைகளும் நீக்கம்

தங்க இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட அனைத்து வரிகளும் மற்றைய தீர்வைகளும் கடந்த முதலாம் திகதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. தங்கத்தின் இறக்குமதிகள் மீதான ஏற்புடையதான அனைத்து இறக்குமதி வரிகளும் மற்றைய தீர்வைகளும் அகற்றப்படுகின்றமையானது சந்தையில் தங்கத்தின் விலைகளைக் குறைவடையச் செய்து நாட்டின் தங்க மற்றும் ஆபரணக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படுவதற்குப் பங்களிக்கும்.

இதற்கமைய, வர்த்தக வங்கிகளும் மற்றைய அதிகாரமளிக்கப்பட்ட நபர்களும் கைத்தொழில் தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் விதத்தில் அவர்களது தங்க இறக்குமதிகளை தற்பொழுது அதிகரிக்க முடியும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## ஹொண்டா நிறுவனத்தின் புதிய மோட்டார் சைக்கிள்

முப்பது ஆண்டுகளாக HONDA ரக உற்பத்திகளை விநியோகித்து வரும் ஸ்ரபோட் மோட்டார் கம்பனி புதிய 125CC மோட்டார் சைக்கிள் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

ஜப்பானின் HONDA மோட்டார் கம்பனியின் துணைநிறுவனமான HONDA MOTOR CYCLE & SCOOTER INDIA கம்பனி 125CC HONDA SHINE மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளது.

Optimax & Ergotec தொழில்நுட்பங்கள் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஷைன் ஓட்டுநரின் தேவைகளை மிக உயர்ந்தளவில் நிறைவேற்றுவதாகும்.

SHINE மேலும் பல புத்தம் புதிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

Tuff-up ரியூப் சிறுதுளை, துவாரம் ஏற்படாமல் தடுக்க உதவும். கிக் ஸ்ராட், செல்ப் ஸ்ராட் என்பவற்றுடனான இந்த மோட்டார் சைக்கிள் 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவிற்கு கிடைக்கிறது.

# வோர்ன் அணி ஹட்ரிக் தோல்வி பெங்களூர் அணி அசத்தல்

(பெங்களூர்)

பிரவீன் குமார்-அனில் கும்பிளேயின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை இலகுவாக வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற 10ஆவது லீக் போட்டியில் ஷேன்வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணித்தலைவர் அனில் கும்ளே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி குமார், கும்ளேயின் துல்லியமான பந்துவீச்சிற்கு ஈடு கொடுக்கமுடியாமல் 19.5 ஓவர்களில் 92 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் யூசுப்பதான் 24 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 26 ஓட்டங்களையும் மார்டீன் 19, ஓஜா 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் அனில் கும்ளே 3.5 ஓவர்களில் 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார் 4 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜக்கலீஸ் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 93 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி பாண்டி-கலிஸ் ஜோடி பிரிக்க முடியாத ஆரம்பத்தின் மூலம் 10.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 93 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் ஜக்கலிஸ் 34 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் பாண்டி 30 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

இப் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்தஜக்கலிஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் இரண்டாவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை ராஜஸ்தான் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியிலும் தோல்வியைச்சந்தித்தது.

## யாழ்.தேர்தல் வாக்குச்சீட்டு ஒரு அடி 8 அங்குலம்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்ட வாக்குச்சீட்டு ஒரு அடி எட்டு அங்குல நீளமாக அச்சிடப்படவுள்ளது.

இம்முறை யாழ். மாவட்டத்தில் 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. இதனால் ஒரு அடி எட்டு அங்குல வாக்குச் சீட்டை அச்சிட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில் மீண்டும் வழிபாட்டுக்காக திறக்கப்படும்

வரலாற்றுப்புகழ் மிக்க வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம் எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் அடியார்களின் வழிபாட்டுக்காக திறக்கப்படவுள்ளது. அன்றையதினம் பிராயச்சித்த அபிசேகம், கும்பாபிசேகம் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆலயத்தில் வழமையான பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

2008ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரத்தில் யுத்தம் காரணமாக அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து இவ் ஆலயம் கைவிடப்பட்டிருந்தது. அண்மையில் ஆலயத்தை சென்று பார்வையிட்ட பாதுகாப்புத்தரப்பினர் அனுமதி வழங்கியதை அடுத்து உதவி அரசாங்க அதிபர் தலைமையில் பரிபாலன சபையினர் ஆலயத்தைச்சென்று பார்வையிட்டனர். (ச-5)

## மன்னாரையும் தலை மன்னாரையும் இணைக்கும் புதிய பாலம் திறப்பு

(மன்னார்)

மன்னார் பெரும் நிலப்பரப்பையும் தலை மன்னாரையும் இணைக்கும் வகையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய பாலத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று காலை 10.30க்கு அதிக பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பதியூதீன், மன்னார் அரசாங்க அதிபர் நீக்கிலஸ்பிள்ளை மற்றும் அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

2007ஆம் ஆண்டு ஜப்பானிய அரசாங்கம் வழங்கிய நிதியில் மன்னார் சமாதான பாலம் என்ற பெயரில் 137 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் உதவியுடன் இந்த பாலம் நிர்மாணிக்கப்பட்டது. அதி நவீன முறையில் பாலம் அமைக்கப்பட்டுள்ளதுடன் நிர்மாணப் பணிகள் இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (ச-5)

## ஐ.நா.-இலங்கை...

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன், நிபுணர்கள் குழுவை நியமித்தால் அதன் மூலம் இரு தரப்பு உறவுகளில் விரிசல் ஏற்படலாம் என இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் தொடர்ச்சி யாக உறவுகளைப் பேணி வருவதாக வெளி விவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தாது பான் கீ மூன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது. அவ்வாறு செயற்படுவதனால் நாட்டு மக்களின் அதிருப்தியை அவர் சம்பாதிக்கநேரிடும்.

நிபுணர்கள் குழு நியமனமான நாட்டின் இறைமையைப் பாதிக்கக் கூடியது. பிரச்சினை எழுப் பப்பட்ட காலத்தினை அடிப்படையாகக் கொண்டு இது ஓர் சூழ்ச்சித் திட்டம் என்பதனை விளங்கிக் கொள்ள முடியும்.

குறுகிய அரசியல் இலாபங்களை அடையும் நோக்கில் இவ்வாறான நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் காலப் பகுதியில் இவ்வாறு இலங்கைக்கு எதிராகச் சர்வதேச ரீதியில் பிரயோகிக்கப்படும் அழுத்தத்தின் பின்னணியை விளங்கிக் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புக்களே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (ச-5)



## பொன்சேகா விசாரணை...

மூன்று குற்றச்சாட்டுக்களும் இராணுவத்தில் இருந்தபோது அரசியலில் ஈடுபட்டமை தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் முதலாவது இராணுவ நீதிமன்றக் குழு கடந்த 16 ஆம் திகதி கடற்படைத் தலைமையகத்தில் விசாரணையை மேற்கொண்டது. இதன்படி இவ்வழக்கின் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொன்சேகா மீதான மற்றைய 4 குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணை 2-வது இராணுவ நீதிமன்றத்தில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது. இவ் விசாரணையை முதலாவது நீதிமன்றத்தில் விசாரணையை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நீதிபதிகள் குழுவே மேற்கொண்டது.

எனினும் இவ் விசாரணைகள் காலம் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 2-வது நீதிமன்றத்திற்கு விசாரணைகளை மேற்கொள்ள புதிய நீதிபதிகளை நியமிக்குமாறு முதலாவது நீதிமன்றக் குழுவின் தலைவர் மடுல்ல கூறியுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜெகத் ஜெயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (ச-3,9)

## புலி உறுப்பினராக இருந்...

இணைந்து கொண்ட நபர் ஒருவர் அந்த அமைப்பில் பல பதவி நிலைகளை வகித்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவினரை வன்னியிலிருந்து காடுகள் ஊடாக கொழும்புக்கு நகர்த்தும் நகர்வுப் பிரிவிலும் அங்கம் வகித்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவின் கட்டளைத் தளபதி பொட்டு அம்மானின் பாதுகாவலராகவும் புலனாய்வுப் பிரிவின் தாக்குதல் அணியின் இரண்டாம் நிலைத் தளபதியாகவும் பணியாற்றியிருந்தார்.

2006 ஆம் ஆண்டு அவர் ஒரு நடவடிக்கைக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தார். அங்கு அவர் இரு மாதங்கள் தங்கியிருந்தபோது அரசு அவரின் பிரசன்னத்தை அறிந்து கொண்டது.

இந்த நிலையில் அவர் அங்கிருந்து பிரித்தானியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தார். அங்கு அவர் அகதி தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்தார்.


ஆனால் போர்க் குற்றங்களின் அடிப்படையில் அவரின் மனு முதலில் நிராகரிக்கப்பட்டது. ஆனால் அவரின் மேன்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஆதாரங்கள் இன்றி ஒரு தனிநபருக்கு எதிராகப் போர்க் குற்றங்களை முன்வைக்க முடியாது என நீதிமன்றம் தெரிவித்துள்ளதுடன் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அகதித் தஞ்சம் கோரத் தடையில்லை எனவும் கூறியுள்ளது.

இதனை எதிர்த்து உள் விவகார செயலாளர் விண்ணப்பித்த போதும் பின்னர் அவர் தனது விண்ணப்பத்தைக் கைவிட்டுள்ளார். (ச-5)










## சர்வதேச நாணய நிதியத்துடன் மீளவும் பேச்சு நடத்தப்படும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள கடன் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் தாம் மீளவும் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டம் கட்டமாக இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பில் மீளப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் எனக் குறிப்பிட்டார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது கட்சி ஆட்சியமைத்தால் இந்த விடயங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமது கொள்கைகள் தொடர்பில் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திற்குத் தெளிவுபடுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச-5)

## ஜெனரல் சரத் பொன்சேகா...

யுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அரசியலில்களமிறங்க உத்தேசித்துள்ளீர்களா? எனத் தாம் பொன்சேகாவிடம் கேட்டதாகவும் இல்லை நான் அரசியலில் ஈடுபடும் மனோநிலையில் இல்லை எனப் பொன்சேகா பதிலளித்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடைசியாகச் சந்தித்த வேளையில் கூடத் தாம் அரசியலில் ஈடுபடப் போவதாக அவர் அறிவிக்கவில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.அரசியலையும் இராணுவத்தையும் ஒப்பு நோக்க முடியாது எனத் தாம் பொன்சேகாவுக்கு அறிவுரை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

இராணுவத்தில் பிறப்பிக்கப்படும் கட்டளைகள் மிக நேர்த்தியாகப் பின்பற்றப்படும். எனினும் அரசியலில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்குப் பல்வேறு விதமான பதில்கள் கிடைக்கப் பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கான ஓய்வு வழங்கலைக் காலம் தாழ்த்தித் தேர்தலில் போட்டியிடாமல் செய்திருக்க முடியும் எனவும் பொன்சேகாவிற்கு அஞ்சியதாக மக்கள் கருதக் கூடாது என்ற காரணத்தினால் தாம் தேர்தலில் போட்டியிட அனுமதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.சரத் பொன்சேகாவிற்கு மன்னிப்பு வழங்கினால் படைத்துறையின் ஒழுக்க விதிமுறைகளுக்கு என்ன நேரும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இராணுவ நீதிமன்றில் ஆஜர்படுத்தும் முறைமை பிரித்தானியாவினால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களின் பின்னர் சரத் பொன்சேகா 7 இலட்சம் டொலர் பணத்தை வங்கி ஒன்றின் காப்புப் பெட்டகத்தில் வைத்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் எச்சங்களை இல்லாதொழிப்பதற்கு இன்னும் சில காலம் தேவைப்படும்.

கீழ் மட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களும் வெளிநாடுகளின் புலி ஆதரவாளர்களின் அச்சுறுத்தல்களும் முழுமையாகக் குறைவடையவில்லை எனவும் தலைவர்களைக் கொன்றொழித்ததன் மூலம் மட்டும் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த தாகக் கருதப்பட முடியாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)










இப்பத்திரிகை வலம்புரி அன் கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.